# பாட்டாளி சிந்தனை

Volume 23 No. 5
January 2013

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா
SUCI
தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ. 3.00


# தோழர் லெனின் நீடூழி வாழ்க!

"உழைக்கும் வர்க்கத்தின் ஒரு பிரிவினரின் நம்பிக்கையைப் பெற்ற, அதேசமயம் சீர்திருத்தப்பாதை சாத்தியமானது என்று பேசி, பூர்ஷுவாக்களை வெள்ளையடித்து அழகுபடுத்தி இதுபோன்ற பேச்சுக்களின் மூலம் மக்கள் கண்களில் மண்ணைத்தூவக்கூடிய, சீர்திருத்தப் பாதையின் சிறப்புகளையும் சாத்தியங்களையும் பற்றி கவர்ச்சிகரமாக விவரித்து மக்களை புரட்சியிலிருந்து திசை திருப்பக்கூடிய கைக்கூலிகள் பூர்ஷுவா வர்க்கத்திற்கு தேவைப்படுகின்றனர்."

**– வி ஐ லெனின்**

*(தொகுப்பு நூல், தொகுதி 29, பக்கம் 508)*



*22 ஏப்ரல் 1870 – 21 ஜனவரி 1924*



# தோழர் அனில் சென் அவர்களுக்கு செவ்வணக்கம்

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் முன்னாள் மூத்த மத்தியக் கமிட்டி உறுப்பினரும் அகில இந்திய யுனைடெட் டிரேட் யூனியன் சென்டர் (AIUTUC)யின் முன்னாள் தலைவருமான நமது அன்புக்குரிய தோழர் அனில்சென் அவர்கள் கல்கத்தா ஹார்ட் கிளினிக் மற்றும் மருத்துவ மனையில் டிச 24, 2012 அன்று இன்னுயிர் நீத்தார். பல்வேறு கடுமையான நோய்களால் நீண்ட நாட்களாகவே அவர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கு வயது 85. அவர் இறந்துவிட்ட செய்தியைக் கேள்வியுற்றவுடன் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ், பொலிட்பீரோ உறுப்பினர்களான தோழர் மணிக் முகர்ஜி, தோழர் ரஞ்சித் தார், மத்தியக் கமிட்டி உறுப்பினர் மற்றும் ஏஐயுடியுசியின் பொதுச் செயலாளரான தோழர் சங்கர் சாஹா, மத்தியக்கமிட்டி உறுப்பினர் மற்றும் மேற்குவங்க மாநிலச் செயலாளர் தோழர் சௌமன் போஸ் ஆகியோர் தோழர் அனில் சென் அவர்களுக்கு புரட்சிகர அஞ்சலி செலுத்தினர். கட்சியின் அனைத்து அலுவலகங்களிலும் கட்சிக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. அனைத்துத் தோழர்களும் கறுப்பு பேட்ஜ் அணிந்து கொண்டிருந்தனர். அன்னாரது உடல் மெடியெரா அமரர் மையத்தில் ஒரு நாள் முழுவதும் வைக்கப்பட்டு பின் டிச 25 அன்று தகனம் செய்யப்பட்டது.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## தில்லி மாணவி மீதான பாலியல் தாக்குதல்

# உங்கள் துயரத்தை பலமாக மாற்றுவீர், வெறுப்பின் கனலை வெல்லற்கரிய போராட்ட உணர்வாக மாற்றுவீர்!

**– பிரவாஸ் கோஷ்**

டெல்லியில் கும்பலால் பாலியல் கொடுமைக்கு ஆளான அப்பெண் 13 நாட்கள் துணிவுடன் உயிருக்குப் போராடி உயர்நீத்த செய்தி கேட்டு நாட்டு மக்கள் சோகத்தில் மூழ்கினர். நாடு முழுவதுமே துயரத்தால் ஆட்கொள்ளப் பட்டிருக்கின்றது. நாட்டு மக்களைப் பீடித்திருக் கின்ற சோகமும் நெஞ்சை உருக்கும் வேதனையும் எமது கட்சி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) நகரங்களிலும் கிராமங்களிலும் நடத்திய எண்ணற்ற மௌன ஊர்வலங்களில் புலப்பட்டது. பல்வேறு வடிவங்களில் இயக்கங்கள் மேலும் நடைபெறும். பெண்ணை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு எங்கள் இதயப் பூர்வ அனுதாபத்தை சமர்ப்பிக்கிறோம். மேலும், துக்கத்தை அனுஷ்டிக்கும் நாட்டு மக்களுடன் நாமும் இணைகிறோம்.




தில்லி மாணவி மீதான பாலியல் தாக்குதலை கண்டித்து கொல்கத்தாவில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பிரமாண்ட பேரணி



பிரவாஸ் கோஷ்
பொதுச்செயலாளர்
எஸ்யுசிஐ (சி)

தான் கொடூரமாகத் தாக்கப்பட்டு பலமுறை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட போதும் கூட தைரியமான அப் பெண் நிலை குலையாமல் இறுதிவரை துணிச்சலாகப் போராடினாள் என்பதை நாம் அறிகிறோம். அவ மானத்திற்கு அப்பெண்ணை அடிபணிய வைக்க இய லாததால் மிருகத்தனம் கொண்ட கிரிமினல்கள் வேகமாக ஓடும் பேருந்திலிருந்து சாலையில் அவளை வீசினர். இந்த இளம் பெண்ணின் வீரத் தையும் துணிவையும் நாங்கள் வணங்குகிறோம். "நான் வாழ விரும்புகிறேன்" என்று அவள் சுய நினைவை இழக்கும் முன்பு கூறினாள். ஆனால் நாடு, அரசு அவளை வாழ விடவில்லை. குற்ற வாளிகளுக்கு கடும் தண்டனை வழங்க

தொடர்ச்சி 7ம் பக்கம்

# தோழர் அனில்சென் அவர்களுக்கு செவ்வணக்கம்

1ம் பக்கம் தொடர்ச்சி

சுதந்திரத்திற்கு முன்பு பிளவுபடாதிருந்த வங்க மாகாணத்தில் சென்ஹாட்டி என்ற கிராமத்தில் தோழர் அனில் சென்னின் முன்னோர் இல்லம் இருந்தது. அவர் தனது 4ம் வயதிலேயே தந்தையை இழந்துவிட்டார். தன் பெற்றோர்களுக்கு அவர் மட்டுமே ஒரே மகனாவார். பள்ளிப் பருவத்திலேயே தனது மாவட்டமான பாரிஷால் மாவட்டத்தில் விடுதலை இயக்கத்தில் அவர் ஈர்க்கப்பட்டார். மேலும், மாணவர் இயக்கத்தின் செயல்வீரராக பல்வேறு சமூகநல நடவடிக்கை களிலும் அவர் ஈடுபடத்துவங்கினார். 1942ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது ஜுகாந்தர் என்ற புரட்சிகர இயக்கத் தலைவர் களுடன் அவருக்கு தொடர்பு ஏற்பட்டது. அவர்களது தலைமையில் பிரிட்டிஷ் அலுவலகங் களான பாரிஷால் கலெக்டர் அலுவலகம், நீதிமன்றக் கட்டிடம் மற்றும் தபால் தந்திக் கட்டிடத்தை எரிக்கும் திட்டத்தில் கலந்து கொண்டார். 1943ல் நிலவிய படுமோசமான பஞ்சத்தில், இலவச உணவு வழங்கும் கூடத்தை நடத்துவது போன்ற பல சமூகசேவைப் பணி களிலும் அவர் பங்கு கொண்டார். நேதாஜியின் ஆசாத் இந்து ஃபவுஜ் (Azad Hind Fouz) செயல் வீரர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நீதிமன்றத்தால் சிறைபிடிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டதை எதிர்த்து அவர்களை விடுவிக்கக் கோரி வெடித்தெழுந்த மாணவர் இயக்கத்தில் தோழர் அனில்சென் முக்கியப் பங்காற்றினார். பாரிஷாலின் புகழ்பெற்ற சுதந்திரப் போராளியான ஸ்ரீ சதின் சென்னின் வழிகாட்டுதலின்படி 1946ல் நடந்த கலவர எதிர்ப்பு இயக்கத்திலும் தோழர் அனில்சென் பங்குகொண்டார்.

1947ல் தோழர் அனில்சென் தனது ஒன்றுவிட்ட சகோதரரின் உடல்நிலை கவலைக்கிடமானதைக் கேள்வியுற்று கல்கத்தா வந்தார். அங்கு தெற்கு கல்கத்தாவில் தங்கியிருந்தபொழுது கலாச்சார கிளப்பில் எமது கட்சியின் காலஞ்சென்ற மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் சுகுமல்தாஸ் குப்தா அவர்களாலும் 'அனுசீலன் சமிதி' என்ற புரட்சிகர விடுதலை இயக்கத்தின் ஒரு தலைவரான தோழர் ரத்தின் சென்னாலும் அறிமுகப்படுத்தப்பட்டு இணைந்தார். அன்றைய நாட்களில் எமது கட்சித் தலைவரும் மிகச்சிறந்த மார்க்சிய சிந்தனையாளர் களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ், அக்கலாச்சார கிளப்பில் படிப்பு வகுப்புக்களை எடுப்பார். தோழர் அனில்சென்னும் அவ் வகுப்புகளில் பங்கெடுக்கத் துவங்கினார். இளமைப் பருவத்திலிருந்தே சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்டமையால் அவரிடம் முளைவிட்டிருந்த தேசபக்தியும் உயர்ந்த சித்தாந்தத்தை நோக்கிய ஈர்ப்பும் தோழர் சிப்தாஸ் கோஷின் சிறப்புவாய்ந்த சொற்பொழிவுகளைக் கேட்டபின்பு மேலும் வளர்ந்து பெருகியது. இதன் போக்கிலே மார்க்சிசம்–லெனினிசம், புரட்சிகர வாழ்க்கைப் போராட்டம் மற்றும் புரட்சிகர குணாம்சம் ஆகியவை குறித்த தெளிவான புரிதலை அவர் பெற்றார். தோழர் சிப்தாஸ் கோஷின் அறைகூவலால் எழுச்சியுற்று தோழர் அனில்சென் ஒரு கம்யூனிஸ்ட் புரட்சியாளராக உருவாகும் போராட்டத்தைத் துவக்கினார். அக்காலத்தில் அவரது குடும்பத்தினர் தெற்கு கல்கத்தாவின் காளிகாட் பகுதியில் ஒரு வீட்டில் குடியிருந்தனர். சில நேரங்களில் கட்சிக் கூட்டங்களும் வகுப்புகளும் அவரது வீட்டில் நடப்பதுண்டு. காளிகாட் கட்சி யூனிட்டிற்கான பொறுப்பு தோழர் அனில்சென்னுக்கு வழங்கப் பட்டது. 1953ல் அனில் சென் கல்கத்தா மாவட்ட செயலாளராக ஆக்கப்பட்டார். அதே ஆண்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க டிராம் போக்குவரத்துக் கட்டண உயர்வுக்கெதிரான போராட்டம், பிளவுபடாத சி.பி.ஐ. கட்சியின் சமரசத் தன்மை கொண்ட தலைவர்களால் கிட்டத்தட்ட நீர்த்துப் போகச் செய்யப்பட்டதால், இப்போராட்டத்தை தொடரவும் தீவிரப்படுத்தவும் கோரி தோழர் சிப்தாஸ் கோஷ் விடுத்த அழைப்பிற்கிணங்க எமது கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் போராட்டத்தை மேலும் வளர்த்தெடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர். எமது கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஆற்றிய இந்த முக்கிய பங்கால் இப்போராட்டம் மீண்டும் உயிர்பெற்று மக்களின் ஏகோபித்த ஈடுபாட்டினால் வெற்றியும் அடைந்தது.

கட்சியின் மாவட்டக் கம்யூன் அமைக்கப்பட்ட போது தோழர் அனில் சென் தனது குடும்பத்தை விடுத்து அந்தக் கம்யூனில் தங்கத் துவங்கினார். 1965ல் பாரத் பந்த்ன் போது அவர் மற்ற தலைவர்களுடன் சிறையில் அடைக்கப்பட்டார். நீண்டகாலம் வரை தோழர் அனில்சென் பணியில் இருந்த போதிலும் தனது வருமானத்தை தனது விதவைத் தாயின் சொற்ப தேவைகள் போக அனைத்தையும் கட்சிக்கு சமர்ப்பித்தார். 1983ல் அப்போதைய கல்கத்தா மாவட்டக் கமிட்டி செயலாளரான தோழர் அசுதோஷ் பானர்ஜி ஸ்தாபனப் பணிக்காக டெல்லிக்கு அனுப்பப்பட்ட போது தோழர் அனில்சென் தனது பணியைத் துறந்து மீண்டும் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பேற்றார். 1988வரை அப்பொறுப்பை அவர் நிறைவேற்றி வந்தார்.

1988ல் நடைபெற்ற கட்சியின் முதல் காங்கிரஸில் தோழர் அனில்சென் மத்தியக் கமிட்டி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மத்தியக் கமிட்டியின் அலுவலகச் செயலாளராகவும் பொறுப்பு வழங்கப்பட்டார். பிறகு கட்சியின் கன்ட்ரோல் கமிஷனின் சேர்மனாகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர் அனில் சென் தொழிற்சங்கத்துடனும் தொடர்பு கொண்டு பணியாற்றி வந்தார். பர்டு கம்பெனியின் (Bird company) தொழிற்சங்கத்தை வழிநடத்தும் பொறுப்பை தோழர் சிப்தாஸ் கோஷ் அவருக்கு வழங்கியிருந்தார். கிருஷ்ணா கிளாஸ் ஒர்க்ஸ் மற்றும் அன்னபூர்ணா கிளாஸ் கம்பெனிகளின் தொழிற்சங்கங்களுக்கு தோழர் அனில்சென் ஒருமுறை தலைவராக இருந்தார். மெடிகல் ரெப்ரசன்டேட்டிவ் அசோசியேசனுடனும் அவருக்கு தொடர்பு இருந்தது. குறுகிய காலத்திற்கு ஏஐயுடியுசியின் அகில இந்திய தலைவராகவும் அவர் பணியாற்றினார்.

மருத்துவ விஞ்ஞானத்தில் அவருக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. தொடர்ந்து அத்துறையில் தனது அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளும் வழக்கமும் அவரிடம் இருந்தது. நோய்வுற்று வாடும் தோழர் களுடனேயே அவர் இருப்பார், அவர்களுக்குப் பயனுள்ள ஆலோசனைகளையும் வழங்குவார். தலைவர்களின் மருத்துவ சிகிச்சை பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது. தான் மிகவும் நோய்வாய்ப்பட்டுப் போகும்வரை அப் பொறுப்பை மிகுந்த அக்கரை மற்றும் அன்புடன் அவர் நிறைவேற்றி வந்தார். நமது காலஞ்சென்ற பொதுச் செயலாளர் தோழர் நிஹார் முகர்ஜி இருதய பைபாஸ் அறுவை சிகிச்சை செய்து கொண்ட பொழுது தோழர் அனில்சென் முழுக்க முழுக்க அவருடனே இருந்து கவனித்துக் கொண்டார். தான் மிகவும் நோய்வாய்ப் பட்டிருக்கும் போதும் பிற தோழர்களின் உடல்நிலை ஆரோக்கியம் குறித்து அக்கரையுடன் விசாரிப்பார்.

1989ல் அவருக்கு இருதயக் கோளாறு இருப்பது கண்டறியப்பட்டு பேஸ் மேக்கர் பொறுத்தப் பட்டது. 2009ல் இரண்டாவது கட்சிக் காங்கிரஸிற்குப் பிறகு அவரது உடல்நிலை மிகவும் மோசமானது. பலதரப்பட்ட நோய்களுக் காக அடிக்கடி அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கடுமையான நிமோனியா காய்ச்சல் தாக்கப்பட்டு கல்கத்தா ஹார்ட் கிளினிக்கில் மீண்டும் ஒருமுறை அவர் கடந்த டிசம்பர் 2ம் தேதி சேர்க்கப்பட்டார். 22 நாட்கள் சிகிச்சைக்குப் பின் டிச 24 அதிகாலை அவர் இன்னுயிர் நீத்தார். அன்னாரது உடல் கல்கத்தா விலுள்ள கட்சியின் மத்திய அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டது. பல்வேறு மாவட்டத்தி லிருந்து தலைவர்களும் தொண்டர்களும் திரண்டுவந்து மறைந்த தலைவருக்கு புரட்சிகர அஞ்சலியைச் செலுத்தினர். கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் மற்றும் பொலிட்பீரோ உறுப்பினர்களான தோழர்கள் மணிக் முகர்ஜி, ரஞ்சித்தார் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். மேலும் பொலிட்பீரோ உறுப்பினர் களான தோழர்கள் கிருஷ்ண சக்ரவர்த்தி மற்றும் அசித் பட்டாச்சார்யா ஆகியோர் சார்பாகவும் மலர் அஞ்சலி செலுத்தினர். கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களான தோழர்கள் தேவப்பிரசாத் சர்க்கார், கோபால் குண்டு, சௌமன் போஸ் மற்றும் சங்கர் சாஹா ஆகியோரும் மேற்குவங்க மாநில செயலக உறுப்பினர்கள், மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் தலைவர்கள் அனைவரும் அஞ்சலி செலுத்தினர். சிபிஐ (எம்), சிபிஐ, ஆர்எஸ்பி சிபிஐ (மாலெ) ஆகிய கட்சி களின் தலைவர்களும் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். இறுதியாக அவரது பூத உடல் மௌன ஊர்வலமாக கியோரத்தாலா தகனசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு 'தோழர் அனில்சென்னுக்கு செவ்வணக்கம்' என்ற முழக்கத்துடன் அனைத்துத் தோழர்களும் அவருக்கு பிரியாவிடை கொடுத்து அனுப்பினர்.

தோழர் அனில்சென்னின் மறைவினால் கட்சி, தனது துவக்க நாட்களிலிருந்து தன்னுடன் இருந்த மூத்தத் தலைவர்களில் ஒருவரை இழந்துவிட்டது.

# ஏ ஐ யு டி யு சி யின் தமிழ்நாடு மாநில சிறப்பு மாநாடு






அகில இந்திய யுனைடெட் டிரேட் யூனியன் சென்டரின் (ஏஐயுடியுசி) 20வது அகில இந்திய மாநாட்டையொட்டி தமிழ்நாட்டில் நெய்வேலியில் மாநில அளவிலான சிறப்பு மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் திறந்தவெளிக்கூட்டத்தில் தோழர் சோமசேகர், ஏஐயுடியுசியின் அகில இந்திய செயற்குழு உறுப்பினர், உரையாற்றுகிறார். டிசம்பர் 23, 2012 அன்று நடைபெற்ற இத்திறந்தவெளிக் கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்ட தொழிலாளர்களில் ஒரு பகுதியினர்

## கடும் முதலாளித்துவ சுரண்டலின் சுமையை சந்திக்கும் இந்திய உழைக்கும் வர்க்கம்

# சரியான திசைவழியில் போராட்டம் நடத்திட சரியான தலைமையும் சரியான ஸ்தாபனமும் தேவை

"நான் ஒரு குடும்பத்தை பராமரிக்க வேண்டியிருந்தது, குழந்தைகளை வளர்க்க வேண்டியிருந்தது. வெறும் உயிர் வாழ்வதற்கான ஊதியத்தை பெறுவதற்கே நான் என் வியர்வையையும் இரத்தத்தையும் சிந்த வேண்டியிருந்தது. ஆனால் என் நிர்வாகம் திடீரென என்னை 'தேவைக்கு அதிகம்' (Surplus) என நினைத்தது. சம்பளப் பட்டியலில் நான் ஒரு சுமையானேன், வேண்டாதவனாகினேன், வெளியேற்றப்பட்டேன். மீண்டும் என்னை எடுத்துக்கொள்ளுமாறு நான் அழுதேன், கைகூப்பி கெஞ்சினேன். ஆனால், நிர்வாகம் சட்டையே செய்யவில்லை. உடனே சீறினேன், எதிர்த்துப் போராடினேன். ஆனால் எனது யூனியன் தலைவர்கள் பாவனைக்காக வெறும் சம்பிரதாய மனு ஒன்றைத் தயாரித்து கொடுத்ததைத் தவிர வேறெதுவும் செய்யவில்லை. வெறுங்கையுடன் திரும்பி வந்த எனக்கு அழுது புலம்புவதையும் பிறர் அழுவதைப் பார்ப்பதையும் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. இந்தக் கொடூரமான வாழ்வை நான் விட்டுச் செல்வதே நல்லது" இவ்வாறு எழுதப்பட்டிருந்த காகிதம் ஒன்று தன் இரு குழந்தைகளையும் கொன்று விட்டு, தன் மனைவியுடன் தானும் விஷமருந்தி உயிரை மாய்த்துக்கொண்ட ஒருவரின் உடலருகே கிடந்தது.

தனது கோடீசுவர எஜமானருக்கு 20 ஆண்டுகளாக விசுவாசமாக உழைத்த நிராதரவான ஒரு தொழிலாளியின் இந்த மௌன செய்தி, சுதந்திரம் பெற்று 65 ஆண்டுகள் ஆன நிலையிலும் நமது நாட்டின் ஒட்டுமொத்த தொழிலாளி வர்க்கத்தின் நிலையையே எடுத்துக்காட்டுகிறது.

மறுபுறம், "ஜிடிபி (மொத்த உள்நாட்டு உற்பத்தி) எண்களினடிப்படையில் வளர்ச்சி பெற்ற, ஒளிரும் இந்தியாவில், உயர்மட்ட தொழிலதிபர்களின் செல்வப்பெருக்கு, விண்ணைமுட்டும் திடீர் கட்டிடங்கள், மின்னும் மேம்பாலங்கள், கண்ணைக் கூசும் வணிக வளாகங்கள், பகட்டான பெயர்ப் பலகைகள், பரந்துவிரிந்த 5 நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் ஒளிரும் பல்லடுக்கு மாடிக்கட்டிடங்கள்" ஆகியவற்றை பார்க்கலாம். முதலாளித்துவ அமைப்பின் ஆதரவாளர்கள், கார்ப்பொரேட்டுகளின் பிரதிநிதிகள், உயர் அமைச்சர்கள், வெளிநாட்டு பயிற்சிபெற்ற பொருளாதார மேதைகள், பிரபல கட்டுரையாளர்கள் அல்லது மிகப்பெரிய தொழிற்சங்க தலைவர்கள் ஆகிய அனைவரும் அக்கறையாக இருப்பதுபோல் நடிக்கிறார்களே தவிர, செல்வங்களை உருவாக்கும், நாகரீகத்தை கட்டி வளர்க்கும் இத்தொழிலாளர்களின் வறுமையைப் பற்றி, துன்பத்தைப்பற்றி எவ்வித அக்கறையும் கொள்வதில்லை. இந்நிராதரவான தொழிலாளர்களின் பசியையும் தரித்திரத்தையும் வைத்துக்கொண்டு, அவர்கள் உழைப்பின் பயனை அறுவடை செய்து தங்களை வளப்படுத்திக்கொண்டு அவர்கள் மீது ஆட்சிபுரிய தங்களுக்குள் போட்டியிட்டுக் கொள்கிறார்கள்.

சரியான சித்தாந்தத்தின் மூலம், சரியான பாதை, சரியான புரட்சிகர தலைமையின் கீழ் எழுச்சி பெற்று தங்களுடைய கூலி அடிமைத்தளையை உடைக்க, தங்கள் அணிகளை ஒன்றுசேர்த்துக் கொண்டு, அனைத்துக் கேடுகளையும் உற்பத்தி செய்யும் இம்முதலாளித்துவ சுரண்டல் ஒழுங்கிற்கெதிராக உழைக்கும் வர்க்கம் பொங்கிஎழும் காலம் வந்துவிட்டது. விடுதலைக்கான சரியான பாதையை தழுவ தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் தாங்க முடியாத இந்த சித்திரவதை வாழ்க்கையை மேலும் பல வருடத்திற்கு நீட்டிக்கச் செய்துவிடும். சரியான பாதையில் செல்ல தற்போதைய சூழ்நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கான சரியான சமூக–அரசியல் கண்ணோட்டத்தைப் பெறுவதற்கான திறனைப்பெற்ற, மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் சமூக மாற்றத்தினை உருவாக்க அதற்கேற்றபடி தங்களுடைய போராட்டத்தை வளர்த்தெடுக்க தொழிலாளிவர்க்கம் தங்களுடைய வரலாற்று ரீதியான கடமையை புரிந்துகொண்டு அதற்கேற்றாற்போல் தங்களது போராட்டத்தை வளர்த்தெடுக்க வேண்டும்.

### இந்தியாவின் தற்போதைய காட்சி

பிற அனைத்து முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தைப்போல இந்திய தொழிலாளி வர்க்கமும் முதலாளித்துவ சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையின் தாங்க முடியாத சுமையின் கீழும் அரசாங்கங்களின் அநியாய தொழிலாளர் விரோத பொருளாதார, நிதி, அரசியல் கொள்கைகளாலும் கடும் துன்பத்திற்காளாகி வருகின்றது. ஏழ்மை, நோய், விலைஉயர்வு, சுழன்றுயரும் வேலையின்மை, வேலை இழப்பு, கூலியின் உண்மையான மதிப்பில் கடும்வீழ்ச்சி ஆகியனவெல்லாம் அழிவின் விளிம்பிற்கே அவர்களைத் தள்ளியிருக்கிறது. பெரியளவிலான ஆலை மூடல்கள் பெருமளவிலான வேலைநீக்கம், வேலை நேரத்தை அதிகரித்தல், ஷிப்டு நேரத்தை அதிகரித்தல், சம்பளத்தை வெட்டுதல், ஏறக்குறைய ரத்தம் முழுவதையும் உறிஞ்சும் வகையில் பணிச்சுமையை இரக்கமற்று அதிகரித்தல், பேரழிவு தொழிற்சாலைகளில் மிகவும் காலாவதியாகிப் போன பாதுகாப்பு நிலைமைகளின் கீழ் சுகாதார மற்ற நிலையில் வேலைசெய்ய நிர்ப்பந்தித்தல், சம்பளத்தை நிறுத்திவைத்தல் மற்றும் தாமதித்தல், ஓய்வூதியப் பலன்களைக் குறைத்தல், பென்ஷன் மற்றும் பிராவிடண்ட் நிதியை மோசடி செய்தல், ஒப்பந்தத் தொழிலாளர் முறைக்கு மாறுவதன் மூலம். பணிப்பாதுகாப்பில் முறைகேடு செய்தல், 'ஹையர் அண்ட் ஃபையர் (Hire and Fire) கொள்கையை அறிமுகப்படுத்துதல் மற்றும் இதுவரை தொழிலாளர்கள் அனுபவித்துவந்த குறைந்தபட்ச பயன்களையும் சாத்தியமான அனைத்து வழிகளிலும் பறித்து, இந்த முதலாளித்துவ அமைப்பிலிருந்தே உருவான ஆழத்திலும் பரிமாணத்திலும் முன்னெப்போதுமில்லாத தன் நெருக்கடியின் சுமை முழுவதையும் தொழிலாளிவர்க்கம் மற்றும் பிறபகுதி உழைக்கும் மக்களின் மீது இந்திய முதலாளிவர்க்கம் சுமத்துகிறது.

அதேசமயம், பூர்ஷ்வா அரசாங்கமும் ஆளும் வர்க்கத்திற்கு அடிபணிந்து பணவீக்கத்தை பட்ஜெட்டின் மூலம் கையாளுதல், மறைமுக வரிகளை கடுமையாக உயர்த்துதல், விலைகளை விண்ணைத்தாண்டி உயரச்செய்தல், அனைத்து துறைகளிலும் மானியங்களை திரும்பப்பெறுதல் மற்றும் பொதுச் செலவினங்களை குறைத்தல் கார்ப்பொரேட்டுகள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தொழிலதிபர்களுக்கு பெருமளவிலான ஊக்கத்தொகை, தள்ளுபடிகள், சலுகைகளை அளிப்பதன் மூலம் உருவாக்கப்படும் நிதிப்பற்றாக் குறையின் சுமையை உழைக்கும் மக்களின் மீதும் பிற ஒடுக்கப்படும் மக்களின் மீதும் சுமத்துகிறது.

### உலகமயம் நிலைமையை மேலும் மோசமாக்கியது

ஒவ்வொரு அம்சத்திலும் முழுக்க முழுக்க உழைக்கும் வர்க்கத்திற்கு விரோதமான முதலாளித்துவ உலகமயத்தின் பேரழிவுக் கொள்கை அமுல்படுத்தப்பட்ட பின்னர் நிலைமை படுமோசமானது. லட்சக்கணக்கான தொழிற்சாலைகள் மூடப்பட்டு, பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து வீதியில் வீசியெறியப்பட்டனர். தொழிற்சாலைகள் பலவும் மூடப்படும் நிலையில் உள்ளன. சந்தையில் போட்டியிடுவதற்காக என்று கூறிக்கொண்டு தொழிற்சாலைகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள் 'பணியாளர் அளவை சரியாக்குதல்' (Right Sizing) என்ற பெயரில் பெரும் எண்ணிக்கையில் பணிநீக்கம் செய்வது, பதவிகளை ஒழிப்பது, நவீன தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டு பணிநீக்கம் செய்வது ஆகியவை வேலைவாய்ப்பு சூழ்நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது. விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய மூலதனத்தீவிர தொழிற்சாலைகளில் கிடைக்கின்ற மிகச்சிறு வேலைவாய்ப்புகளும் 'ஒயிட் காலர் வேலை'களாக இருக்கின்றன. இவை மிக அதிகபட்ச திறனை கொண்டவர்களுக்கே கிடைக்கின்றன. ஒப்பந்தத் தொழிலாளர் முறை மற்றும் வெளிப்பணி ஒப்படைப்பின் மூலம் நிரந்தர வேலை வாய்ப்பென்பது ஏறக்குறைய துடைத்தெறியப்பட்டுவிட்டது. அரசுத் துறைகளில் கூட சட்டத்துக்கு புறம்பான முறையில் நிரந்தரப் பணிகள் ஒப்பந்தப் பணிகளாக மாற்றப்படுகின்றன. சில வருடங்களுக்கு முன்பு, சென்ட்ரல் அட்வைசரி லேபர் போர்டு தடையுத்தரவு பிறப்பித்தும்கூட வயர்மேன், எலக்ட்ரீஷியன், மெக்கானிக், ஆப்பரேட்டர்ஸ், கார்பென்டர்ஸ் முதலான பணிகள் மத்திய பொதுப்பணித்துறையாலேயே, மத்திய அமைச்சகங்கள், மத்திய அரசு அலுவலகங்கள் மற்றும் அமைச்சர்களின் வீடுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டன. அரசாங்கமே இவ்வாறு சட்டத்தை மீறினால் தனியார் துறையில் எப்படி நிலைமை போய்க்கொண்டிருக்கிறது என்பதை எளிதில் புரிந்து கொள்ளமுடியும்.

ஜூலை 19, 2012ல் மத்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட இரண்டாவது வருடாந்திர வேலை வாய்ப்பு – வேலை வாய்ப்பின்மை சர்வேயின்படி மொத்த மக்கள் தொகை (2011–2012) 120 கோடி (1,200 மில்லியன்)யில் 61 கோடி (610 மில்லியன்) மக்கள் அதாவது 50.8% பேர் ஏதோ ஒரு வேலை வாய்ப்பை பெற்றிருக்கின்றனர். வேறு வார்த்தைகளில் இவர்களே உழைப்பு சக்தியாவர். மீதமுள்ள 49.2% மக்கள் வேலையின்றி இருக்கின்றனர் என்பதை இதுவே ஒத்துக் கொள்கிறது. மேலும், இந்த 61 கோடி உழைப்பு சக்தியில் 19.7% மட்டுமே அதாவது 12 கோடி மக்கள் கூலி அல்லது சம்பளம் பெறுபவர்களாவர். மீதமுள்ள 80.3% அதாவது 49 கோடி பேர் ஏழ்மை சூழ்ந்த உழைக்கும் வர்க்கத்தின் கீழ்நிலையிலுள்ள விவசாயத் தொழிலாளர்கள், கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் அதைபோன்றவர்கள் சுயவேலைவாய்ப்புள்ள தொழிலாளர்களாகவோ (48.6% அல்லது 29.65 கோடி) அல்லது தினக்கூலிகளாகவோ (31.7% அல்லது 19.34 கோடி) உள்ளனர். பல்வேறு ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுபோல் 50% லிருந்து 60% தொழிலாளர்கள் ஒப்பந்த தொழிலாளர்களாவர். மேலும், நாட்டின் மொத்த உழைப்பு சக்தியில் 6% மட்டுமே அமைப்புசார்ந்த துறையினர். மீதமுள்ள 94%த்தினர் அமைப்பு சாராதோராவர். சமூக பாதுகாப்பு உட்பட சட்டபடியான மற்றும் நியாயமான அனைத்துப் பலன்களும் இந்த பரந்துபட்ட உழைப்பு சக்தி மறுக்கப்படுவதோடு அரசாங்கம் அவர்கள் குறித்து எவ்வித அக்கறையும் கொள்வதில்லை. அவர்களது பிறப்பு, இறப்பு குறித்த விபரங்களை விட்டு விடுங்கள் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது குறித்துகூட அக்கறை கொள்வதில்லை. எஞ்சியுள்ள கொஞ்சநஞ்சம் சட்ட பாதுகாப்பையும் முதலாளித்துவ உலகமயத்தின் தொழிலாளர் விரோத பரிந்துரையின்படி 50 தொழிலாளர் சட்டங்களை ஒரு விரிவான பாராளுமன்ற சட்டதிருத்தத்தின் மூலம் துடைத்தெறிய சமீபத்தில் அரசாங்கத்திற்கு யோசனை இருந்தது நினைவிருக்கலாம். ஆனால், தற்போது இருக்கின்ற தொழிலாளர் சட்டங்களின் கீழ் ஒப்பந்த அல்லது தினக்கூலித் தொழிலாளர்கள் வராமலிப்பதால், அத்தகைய திருத்தம் எதையும் கொண்டு வருவதில் எந்த பயனும் இல்லை என அரசாங்கம் உணர்ந்தது.

இவையனைத்தும் இருக்க, கூலியை நிர்ணயிப்பதில் கூட சுரண்டல் கொடூரமாக இருக்கிறது. உழைப்பு சக்திகளால் உருவாக்கப்பட்ட மொத்த மதிப்பில் வெறும் 16 சதவீதமே தொழிலாளர்களுக்கு கூலியாகவோ சம்பளமாகவோ தரப்படுகிறது என்று கூறப்படுகிறது. மீதமுள்ள 84 சதவீதமானது மாபெரும் மேதை கார்ல் மார்க்ஸ் காட்டியுள்ளதுபோல், முதலாளிகள் லாபமாகப் பெறுகின்ற உழைப்புச் சக்தியின் உபரிமதிப்பாகும். இன்னும் சில தொழில்களில் 15ல் அல்லது 16ல் ஒரு பகுதி கூலியாக தரப்படுவதானது எதைக் குறிக்கின்றதெனில் உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் மொத்த செல்வமும் ஒரு சிலரிடம் குவிகின்றதென்பதைக் காட்டுகிறது. சட்டத்திற்கெல்லாம் ஒரு மதிப்பும் இல்லை. 15வது இந்திய தொழிலாளர் மாநாட்டில் வரையறுக்கப்பட்ட நியமங்கள், கோட்பாடுகளின்படியும் பின்பு உச்சநீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழங்கப்பட்ட தீர்ப்பின்படியும் உரிய அரசாங்க நிறுவனங்களால் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டு அதைக் கட்டாயமாக வழங்குவதே நாட்டின் சட்டமாகும். ஆனால், அரசாங்கங்கள் அவை மத்தியிலும் சரி, மாநிலத்திலும் சரி, வேறுபாடின்றி அனைத்து கட்சிகளுக்கும் இச்சட்டத்தை பின்பற்றுவது குறித்து கிஞ்சித்தும் அக்கறை இல்லை. குறைந்தபட்ச கூலியை அரசாங்கத்தின்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# ஆளும் பூர்ஷ்வா வர்க்கம் முதலாளித்துவ நெருக்கடியின் முழு சுமையையும் உழைக்கும் வர்க்கத்தின் மீதே சுமத்துகிறது

3ம் பக்கம் தொடர்ச்சி

எந்த நிறுவனம் நிர்ணயிக்கும் என்பது யாருக்கும் தெரியாது. மத்திய–மாநில அரசாங்கங்களால் எந்தளவு அறிவிக்கப்பட்டதோ அந்தளவு குறைந்தபட்ச கூலியும் கூட தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இந்த குறைந்தபட்ச கூலியின்றி ஏமாற்றப்படும் பல லட்சம் தொழிலாளர்கள் பெரும்பாலும் அமைப்புசாரா துறையைச் சேர்ந்தவர்களே. தொழிலாளர்களின் கட்டாயப் பங்களிப்பைக் கொண்ட பிராவிடண்ட் நிதியை செலுத்தாமல் தவறுவது ஒரு ஜாமீனில் வெளிவர முடியாத குற்றமாகும். பற்பல இடங்களில் நடக்கும் இக்குற்றங்களை அரசாங்கங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றன. நீதித்துறையின் கதவுகளைத் தட்டுவது ஒரு வீண் வேலை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசாங்கக் கணக்கில் வைக்கப்படும் தொழிலாளர்களின் பங்களிப்பான பி.எஃப்பிற்கே இந்த கதி என்றால் பின்பு பி.எஃப். அல்லது கிராஜுவிட்டியின் பலனை பெறுவதன் நிலைமை என்னவாகும் என்பது எளிதில் விளங்கும். உழைக்கும் மக்கள் சுரண்டப்படும் பரிமாணத்தை புரிந்துகொள்ள இதுவே போதுமானதாகும்.

மேலும் தற்பொழுது, சீர்திருத்தம் எனும் பெயரில் சில்லரை வர்த்தகம் அந்நிய ஏகபோகங்களுக்கு திறந்துவிடப்பட்டிருக்கிறது. இதனால் லட்சக்கணக்கான சிறிய மற்றும் நடுத்தர தொழிற்கூடங்கள், மேலும் சில்லரை வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும், சுயவேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் 4 கோடி பேர் வேலையை இழந்துவிடுவர்.

குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் முதலாளித்துவ அமைப்பின் கொடூரத்தை தெளிவாக காணமுடியும். யுனிசெப்பின் மதிப்பீட்டின்படி 5 முதல் 14 வயது வரையிலான 3.5 கோடிக்கும் மேலான குழந்தைகள் அற்ப கூலிக்கு அபாயம் நிறைந்த தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டும் அவ்வேலையையும்கூட எப்போது வேண்டுமானாலும் இழக்கும் அபாயத்தை எதிர்கொண்டும் இருக்கிறார்கள். ஆனால், இவ்வெண்ணிக்கை 6லிருந்து 12.5 கோடி என ஒரு அதிகார பூர்வமற்ற தகவல் கூறுகிறது. குழந்தைத் தொழிலாளருக்கெதிரான பேரிரைச்சல் இருந்தபோதிலும் குழந்தைகள் நலனுக்காக என்று சொல்லி பல்வேறு சிறப்பு நாட்கள் அனுசரித்தபோதிலும், இந்நிலை சற்றும் மாறவில்லை.

### உரிமைகள் மறுப்பும் தொழிலாளிவர்க்க இயக்கத்தின் நலிவும்

தீவிர நெருக்கடி மற்றும் எப்போதும் அதிகரிக்கும் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலின் காரணமாக வேலையளிப்பவருடன் தொழிலாளிவர்க்கம் கூர்மையான முரண்பாடுகளை எதிர்கொண்டு வருகிறது என்பது உண்மைதான். உழைக்கும் மக்களின் பொங்கிவரும் இந்த அதிருப்தியானது வேலைநிறுத்தங்கள் மற்றும் பிற வடிவங்களிலான இயக்கங்களின் மூலம் அவ்வப்போது வெடித்துக் கிளம்புவது அதன் வெளிப்பாடேயாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் இந்தப் போராட்டங்கள் முதலாளித்துவ எதிர்ப்பு புரட்சிகர போராட்டம் எனும் திசைவழியில் செல்லாதிருப்பதை உறுதிசெய்ய ஆளும் வர்க்கம் இப்போராட்டங்களை போலீஸ் – ராணுவத்தை கொண்டு மட்டுமல்ல, போராடி ஈன்ற ஜனநாயக மற்றும் தொழிற்சங்க உரிமைகளையும்கூட திட்டமிட்ட வகையில் பறிக்கிறது. சக்திவாய்ந்த பிரச்சார சாதனங்கள் மற்றும் அடிமை ஊடகங்களின் உதவியுடன் முதலாளித்துவ உடைமையாளர்களின் வார்த்தைகளில் தொழிலாளர்களின் பிரச்சினையானது 'உற்பத்தியை முடக்குகின்றன' 'அமைதியைக் குலைக்கின்றன' என்ற தோற்றம் ஏற்படுத்தப்படுகிறது. வேலை நிறுத்தங்களை தடை செய்ய வேண்டுமென்ற கூக்குரல் எப்போதும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட எவ்வழியிலும் எதிர்ப்பை பதிவுசெய்யக்கூட ஆயிரம் தடைகள் திணிக்கப்படுகின்றன. ஆனால் ஆலை மூடல்களின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில் வேலைநிறுத்தங்கள் மிகக்குறைவே ஆகும். ஆகையால்தான் ஆலை மூடல்களை ஒப்பிடுகையில் வேலைநிறுத்தங்களால் எத்தனை மனித நாட்கள் இழக்கப்பட்டன என்பதை அரசாங்க அதிகாரிகள் சொல்ல மறுக்கின்றனர்.

பின் உற்பத்தி குறைவதற்கு எவ்வாறு தொழிலாளர்கள் பொறுப்பாக முடியும்? தொழிற்சாலையை நடத்துவதால் மிதமிஞ்சிய லாபம் முதலாளிக்கு கிடைக்கும்பொழுது, குறைந்தபட்சம் உயிர்வாழ்வதற்காவது தொழிலாளிக்கு ஏதேனும் கிடைக்குமல்லவா? மாறாக, தொழிற்சாலையை மூடிவிட்டால் ஆடம்பர வாழ்க்கைக்கோ அல்லது அடிப்படை தேவைகளை அனுபவிக்கவோ முதலாளிகளுக்கு எவ்வித குறைவும் இருக்காது. ஆனால் தொழிலாளிகள் பட்டினி கிடந்து சாகக்கூட நேரிடும். எனவே, ஆசைகொண்டு வேலை நிறுத்தம் செய்கிறார்கள். ஆகையால் தொழிலாளர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட வேண்டும் என வாதிடுவது பைத்தியக்காரத்தனமாகும். தொழிலாளர் காரணமாக அல்ல – இந்த முதலாளித்துவ பொருளாதார விதியின் காரணமாகவே சந்தை சுருங்குகிறது. ஆனால் சந்தை சுருங்குவதை காரணமாகக் கூறி தொழிற்சாலையை மூடும் தங்குதடையற்ற உரிமை முதலாளிகளுக்கு உண்டு. ஆனால் அநீதி, ஏமாற்றுக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை தொழிலாளர்களிடமிருந்து பறிக்க வேண்டும் என்ற வாதத்தில் ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா? ஆளும் பூர்ஷ்வாக்களின் மிகுந்த நம்பிக்கையைப்பெற்ற கட்சி அல்லது கூட்டணிகளின் அனைத்து மத்திய அரசாங்கங்களும் ஐ.எல்.ஓ. (International Labour Organisation)வின் முக்கிய விதிகள் எண் 87 மற்றும் எண் 98ன் படியான அணிதிரட்டும் உரிமை, சங்கம் சேரும் உரிமை, கூட்டுபேர உரிமை ஆகிய அடிப்படை மற்றும் இயற்கையான மனித உரிமையை உறுதிப்படுத்த மறுத்துவிட்டன. கன்வென்ஷன் 151ன் படியான அரசு ஊழியர்களின் தொழிற்சங்க உரிமைகளையும் இந்திய அரசாங்கம் உறுதிப்படுத்தவில்லை.

இதுமட்டுமல்ல. ஒடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் அனைத்து வடிவங்களின் மூலமும் உரிமைகளைப் பறித்தல், எதிர்ப்பு குரலை ஒடுக்குவது, அனைத்துவகை பொருளாதாரவாதம் மற்றும் பிற முன்னுரிமை தேடும் மனநிலையை உருவாக்கி தொழிலாளர்களை மாசுபடுத்த, தொழிலாளி வர்க்க ஒற்றுமை மற்றும் இனவாத, மதவாத, பிராந்தியவாத, மொழிவெறி அல்லது பிரிவினை வாத உணர்வுகளை தூண்டி சகோதரத்துவ உணர்வை உடைத்தல், எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களை திசைதிருப்ப தொழிலாளிவர்க்க இயக்கத்திற்குள்ளேயே இருந்துகொண்டு முதலாளி வர்க்கத்தின் ஏஜெண்டுகளை உருவாக்குதல் போன்ற தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். புத்திகூர்மையுள்ள ஆளும் பூர்ஷ்வாக்களுக்கு எவ்வளவுதான் மிகப்பெரிய அளவிலான கொடூர ராணுவம் மற்றும் போலீஸின் வெறும் அடக்குமுறையை வைத்துக்கொண்டு இந்த அநீதியின் ஆட்சியை காத்துவிட முடியாது. அமைப்புரீதியாக திரண்ட மக்களை அடக்கிவிட முடியாது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். தொழிலாளர்கள் தங்களுடைய தார்மீக வலிமையை உச்சத்தில் வைத்திருந்தால், சரியான புரட்சிகர சித்தாந்தத்தை அடையாளங்கண்டுவிட்டால் பட்டினி கிடந்தாலும் கூட, சித்திரவதை செய்யப்பட்டாலும் கூட அநீதியை கண்டு எழுந்துவிடுவார்கள். அவர்கள் நூறுமுறை ஒடுக்கப்பட்டாலும் நாய்களைப் போன்று ஓலமிடமாட்டார்கள். அதுமட்டுமின்றி அவர்கள் சாகசவாத எதிர்ப்புகளில் அடிக்கடி ஈடுபட்டு தமது சக்தியை விரயம் செய்வதோ அல்லது சந்தர்ப்பவாத மற்றும் சலுகைகளை தேடும் மனப்பாங்கை குருட்டுத்தனமாக பின்பற்றியோ விடமாட்டார்கள். உள்ளுக்குள்ளேயே இருந்து தொழிலாளர்களை சீரழிக்க கலாச்சாரரீதியில் அழிக்க அனைத்துப் படைக்கலனும் ஆளுவோரால் ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஆளும் முதலாளி வர்க்கத்தின் நன்கறிந்த அடிவருடிகள் மட்டுமல்ல உள்ளிருந்தே தொழிலாளி வர்க்க இயக்க முகமூடி அணிந்த சமரசவாத சமூக–ஜனநாயக அரசியல் நடத்தும் போலி மார்க்சிஸ்டுகள் மற்றும் திருத்தல்வாதிகள் ஆளும் வர்க்கத்திற்கு மிகுந்த சாதகமாகிவிட்டதுதான் மிகுந்த சோகமாகும். உண்மையில், தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கு பிரதான அபாயமாகத் தோன்றியுள்ள திருத்தல்வாதத்தினுடைய துரோகத்தின் மூலமே சீரழிந்த மரணப்படுக்கையிலுள்ள நெருக்கடி சூழ்ந்த முதலாளித்துவம் தன் வாழ்நாளை நீடித்துக்கொண்டிருக்கிறது. வளர்ந்துவரும் தாக்குதலுக்கெதிராக சரியான திசைவழியில் தொழிலாளிவர்க்க இயக்கம் வளர்த்தெடுக்கப்பட வேண்டுமானால் இந்த அம்சம்தான், எந்த குழப்பமுமின்றி நன்கு புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

### சோசலிசத்தில் பின்னடைவும் இந்திய தொழிற்சங்க இயக்கத்தின் தற்போதைய சூழ்நிலையும்

இந்தியாவில் தொழிலாளிவர்க்க இயக்கத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் வரலாற்றை நாம் பார்த்தோமென்றால் வரலாற்றுரீதியான காரணங்களுக்காக பிரதானமாக அது இடதுசாரித்தன்மை பெற்றிருந்தது. வெல்லற்கரிய மார்க்சிசம் – லெனினிசம் எனும் சித்தாந்தத்தின் அடிப்படையில் சர்வதேசிய தொழிலாளிவர்க்க போராட்டங்கள் வளர்ந்து, முன்னேறியதன் காரணமாக தொழிற்சங்க இயக்கங்கள் ஒரு புதிய உள்ளடக்கத்தையும் புதிய திசைவழியையும் அடைந்ததை நாம் அறிவோம். ஆளும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கெதிரான தீவிர வர்க்கப்போராட்டத்தின் மேடையாக தொழிற்சங்கங்கள் உருவாயின. நியாயமான தொழிற்சங்க இயக்கங்களின் போக்கில் தொழிலாளர்கள் பல நியாயமான உரிமைகளை பெற்றனர். மாபெரும் ரஷ்யப்புரட்சிக்கு பின்பு, சர்வதேசிய தொழிலாளிவர்க்க இயக்கம் மேலும் ஊக்கம் பெற்று, தொழிலாளர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ள மேலும் மேலும் முதலாளிகளை நிர்ப்பந்தித்தது. சோசலிச முகாம் தோன்றிய பின்னர் இவ்வியக்கம் உச்சத்தை அடைந்தது. உலகம் முழுவதும் இரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலிலிருந்து விடுதலை பெறுவதற்கான வாசலில் இவ்வியக்கம் இருந்தது. இத்தகைய ஒரு நிலைமையில், இந்திய தொழிலாளிவர்க்கம் இடதுசாரி–மார்க்ஸிஸ்டுகள் என்றறியப்பட்டவர்களை நோக்கி ஈர்க்கப்பட்டு அவர்களின் தலைமையில் போராட்ட சூறாவளியில் இறங்கியது. மிகப்பெரும் அளவில் 'செங்கொடி'யுடனும் 'புரட்சி நீடூழி வாழ்க' எனும் கோஷத்துடனும் தொழிற்சங்க இயக்கம் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டது. இது பிரதானமாக அனைத்து மத்திய தொழிற்சங்கங்களின் ஒரு ஒன்றுபட்ட போராட்டமாக இருந்தது. அவற்றில் பெரும்பாலானவை இடதுசாரிவாதத்தை சார்ந்திருந்தது. இதனால் போர்குணமிக்க தொழிற்சங்கவாதத்தின் உத்வேகம் பரந்துபட்ட அளவில் உணரப்பட்டது.

ஆனால், சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் தலைமையை பூர்ஷ்வாக்களின் ஏஜெண்டுகளான திருத்தல்வாதிகள் (ரஷ்யாவில் ஸ்டாலினுக்குப் பின்பு வந்த குருச்சேவ் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் – ஆர் பாசி) கைப்பற்றியவுடன் இப்போக்கு தலைகீழாக திரும்பியது. வர்க்கப் போராட்டத்தை தீவிரப்படுத்துவதற்கு பதிலாக, தொழில் அமைதி மற்றும் தங்குதடையற்ற உற்பத்தியை பேணுதல் எனும் பெயரில் ஆளும் முதலாளிவர்க்கத்திடம் பரிபூரண சரணாகதி அடையும் வழியை எடுத்தனர். வர்க்கக்கூட்டு மற்றும் வர்க்க நல்லிணக்கம் எனும் கோட்பாட்டை போதித்து உழைக்கும் மக்கள் நலனின் முதுகில் குத்தினர். எனவே உழைக்கும் மக்களின் போராட்டங்கள் அதன் உத்வேகத்தை இழந்து, உள்ளிருந்தே பலவீனப்பட்டது. திருத்தல்வாத துரோகம் மற்றும் முதலாளித்துவ–ஏகாதிபத்தியவாதிகளால் உதவி செய்யப்பட்டு, ஆதரிக்கப்பட்ட சதியின் காரணமாக சர்வதேசிய உழைக்கும் வர்க்கத்தின் அரணாக திகழ்ந்த வலிமையான சோசலிச முகாம் மேலும் பின்னடைவை சந்தித்து, முடிந்தே போனது.

சர்வதேசிய தொழிலாளிவர்க்க இயக்கத்தின் இப் பின்னடைவை முழுமையாக சாதகமாகிக் கொண்டு சுரண்டும் இந்திய பூர்ஷ்வாக்கள் தொழிலாளர்களின் மீது பாய்ந்து தாக்குதல் தொடுக்கத் துவங்கினர். போராடிப்பெற்ற தொழிற்சங்க மற்றும் பிற உரிமைகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக பறிக்கப்பட்டு அதிகரித்த முதலாளித்துவ சுரண்டலின்கீழ் தொழிலாளர்கள் நிராதரவாக்கப்பட்டுவிட்டனர். இந்திய ஆளும்வர்க்கம் ஏகாதிபத்திய பன்னாட்டு கம்பெனிகளுடன் நெருங்கிய கூட்டணியை வைத்துக்கொண்டு இயற்கை வளங்களையும் இந்திய மக்களின் உழைப்புச் சக்தியையும் சுரண்டுவதற்கு அன்னிய மூலதனத்தை இங்கு அனுமதித்துவருகிறது. உழைக்கும் மக்கள்

தொடர்ச்சி 5ம் பக்கம்

# அனைத்துத் தொழிற்சங்க, ஜனநாயக உரிமைகளும் பறிக்கப்படுகின்றன

*4ம் பக்கம் தொடர்ச்சி*

மீது மேலும் மேலும் கொடுந்தாக்குதல்களை இந்திய ஆளும்வர்க்கம் தொடுத்துவருகிறது. அதற்காக அதன் பேரழிவு ஒடுக்குமுறைக்கருவிகளை மேலும் கூர்மைபடுத்தி வருகிறது. தொழிலாளர்களின் எதிர்ப்பு இயக்கங்களை அழித்து உள்நாட்டு வெளிநாட்டு ஏகபோகங்களுக்கு 'இணக்கமான தொழில் சூழ்நிலைமை'களை ஏற்படுத்துகிறது. ஒன்றன்பின் ஒன்றாக தொழில் தகராறுகள் சட்டம், தொழிற்சங்க சட்டம் போன்ற சட்டங்களை ஆளும்வர்க்க நலனுக்கு ஏற்ப திருத்திவருகிறது.

கூட்டுபேரத்தின் வழியில் தொழிற்சங்க உரிமைகளை பூர்ஷ்வாவர்க்கமே அதன் உதயத்தின்போது வழங்கியது என்பதை நாம் நினைவுபடுத்தி பார்க்க வேண்டும். கூட்டு பேரத்திற்கான சட்டரீதியான ஒரு கருவியாக தொழிற்சங்கங்கள் கருதப்பட்டன என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் தீர்க்க முடியாத சந்தை நெருக்கடி சூழ்ந்த அதன் சீரழிந்த மரணத்தருவாயிலுள்ள அதே பூர்ஷ்வாக்கள் அத்தகைய உரிமைகளை பறிக்கவும் சட்டரீதியான தொழிற்சங்க இயக்கங்கள் மற்றும் கூட்டு பேரத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளை புறந்தள்ளவும் அனைத்து சதிகளையும் செய்துவருகிறார்கள். இந்த முதலாளித்துவ உலகமய காலகட்டத்தில் முதலாளித்துவ உடைமையாளர்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாக உழைப்பவர், உழைப்பைப் பெறுபவர்களுக்கிடையே எழும் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதில் சமாதானம் மற்றும் சமரசம் செய்யும் அரசாங்கத்தின் இயந்திரத்தை கூட செயலற்ற தாக்கிவிட்டார்கள். ஆளும் முதலாளிவர்க்கத்தின் கட்டளைக்கு இது போல் அப்பட்டமாக அடிபணிவதென்பது காங்கிரஸ், பிஜேபி அல்லது அறியப்பட்ட பூர்ஷ்வா கட்சிகள் மட்டுமல்ல, மேற்கு வங்கம் மற்றும் கேரளத்தில் நாம் கண்டதுபோல் போலி மார்க்சிஸ்டுகளான சிபிஐ(எம்), சிபிஐ கட்சிகளுக்கும் உரித்தானதாகும்.

### கீழ்படியும் நீதித்துறையை உருவாக்கும் முயற்சிகள்

ஆளும் கட்சியின் ஆசிகளுக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்ட வகையில் வார்க்கப்பட்ட, நிர்வாகத்திற்கு அதிகாரவர்க்கத்திற்கு கீழ்படிந்து நடக்கக்கூடிய வகையில், நிர்வாக நடுநிலைமையை பராமரித்தல் எனும் கோட்பாட்டை புதைக்கக்கூடிய வகையில் நீதித்துறையையும் கூட மாற்ற முயற்சிகள் வெளிப்படையாகவே மேற்கொள்ளப்பட்டன. சிவில் ஊழியர் தன்னை பாதுகாத்துக்கொள்ளும் உரிமையையும் இயற்கை நீதியையும் மறுத்து எந்த ஊழியரையும் எந்த நேரமும் பணியிலிருந்து நீக்கும் அதிகாரத்தை அதிகார வர்க்கத்திற்கு அரசியலமைப்பின் 311(2)வது பிரிவு வழங்குகிறது என வியாக்கியானம் கூறி 1980களின் மத்தியில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய ஒரு வழக்கு மிகச்சிறந்த உதாரணமாகும். உண்மையில், அந்த தீர்ப்பு அல்லது நீதித்துறையின் வர்க்கசார்புள்ள அக்குறிப்பானது, பரந்துபட்ட அளவில் வேலை அளிப்போருக்கு 'ஹையர் அண்ட ஃபையர்' கொள்கையை நடைமுறைப்படுத்த வழி ஏற்படுத்திக் கொடுத்தது. இயற்கையாகவே நாடு முழுவதும் அத்தீர்ப்பிற்கு எதிராக கடும் எதிர்ப்பு கிளம்பியது.

அதனைத் தொடர்ந்து, பொதுச் சாலையின் ஓரங்களில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு கேரள உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் விதித்த தடையுத்தரவிற்கும் மிகப்பெரும் எதிர்ப்புகள் கிளம்பியது. உயர்நீதிமன்றத்தின் தன்னிச்சையான அவ்வுத்தரவானது தனித்த அதிகாரத்தின் மரபு வழிப்பட்ட உரிமையை உடைத்தெறிய தயங்கவில்லை என ஊடகங்களும் கூறின. முன்பு, மாநிலத்தில் பந்த் மற்றும் ஹர்த்தால்களுக்கு கேரள உயர்நீதிமன்றம் தடைவிதித்ததானது அற்ப காரணங்களை கூறியும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு, தர்க்கத்திற்கு முரணாகவும் அகவயப்பட்ட விளக்கங்களை கூறியதாக சொல்லப்பட்டது.

தமிழ்நாடு அரசாங்கம் தன் 1,70,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்த சந்தர்ப்பத்தில் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைக் கூட தமிழ்நாடு உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியது, 'நீதிமன்ற தீவிர செயல்பாடு' (Judicial Activity) என்று சொல்லப்படுபவைகளை ஆயுதமாக பயன்படுத்தி தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக நீதிமன்றம் பாரபட்சமாக நடத்துகொண்டுள்ளது, கார்ப்பொரேட் நலன்களை பாதுகாக்க மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது, அமைப்புச்சட்டத்தில் உத்திரவாதப்படுத்தப்பட்டுள்ள குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகள் மீதுகூட தடைகளை திணித்துள்ளது என அந்த உயர்நீதிமன்றத்தின் மீது விமர்சனம் எழுந்தது.

திவாலாவதிலிருந்து விவசாயிகளை பாதுகாக்கவோ அல்லது லட்சக்கணக்கான குடிசை தொழில்களும் சிறுதொழில்களும் மூடப்பட்டு, அங்கு தொழிலாளர்கள் தங்கள் வாழவாதாரத்தை இழந்த போது நீதிமன்றங்கள் தங்கள் 'தீவிர செயல்பாட்டை' காட்டுவதற்கான தேவையை உணரவில்லை என விமர்சகர்கள் சுட்டிக்காட்டினர். ஆனால் தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையை பறிப்பதில் மட்டும் அதிதீவிர ஆர்வத்தை காட்டியது. சமூக நீதியைக் கருத்தில்கொண்ட முற்போக்கான செயற்பாடுகளின் பாதுகாப்புக்கான 9வது அட்டவணையில் இடம்பெற்றிருந்த சட்டங்களும் கூட நீதிமன்ற மறுபரிசீலனைக்கு உட்பட்டவையே என்ற உச்சநீதிமன்றத்தின் கருத்தும்கூட பத்திரிக்கைகளில் விமர்சனத்திற்கு உள்ளானது. புகழ்பெற்ற நீதிபதிகளான விஆர் கிருஷ்ணய்யர், சின்னப்பரெட்டி, பகவதி பிரசாத் போன்றோர் அரசியல் சாசனத்தில் உள்ள சமத்துவம் மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்த அம்சங்களை ஏழைகளின் நலனை கருத்தில்கொண்டு தீர்ப்பு வழங்கியுள்ளனர். ஆனால், இத்தகைய பாரம்பரியத்தை நவீன–தாராளவாத கண்ணோட்டத்தால் வழிநடத்தப்படும் தற்போதைய நீதிமன்ற தீர்ப்புகள் உதறித்தள்ளிவிட்டன.

### பரந்துவிரியும் இருளில் ஒரு ஒளிக்கீற்று

மேற்குவங்கத்தில் 1960களின் இறுதியில் போர்குணமிக்க தொழிலாளிவர்க்க போராட்டங்களின் ஒரு புதிய அத்தியாயம் எழுந்ததை இங்கு நினைவுபடுத்த வேண்டியது அவசியம். அப்பொழுது எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை உள்ளடக்கிய இடதுசாரி – ஜனநாயக சக்திகளைக் கொண்ட முதல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேற்கு வங்கத்தில் பதவி ஏற்றது. எமது கட்சியின் ஸ்தாபகரும் இக்காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களுள் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் வழிநடத்தப்பட்டு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் முன்முயற்சியாலும் வற்புறுத்தலினாலும் அந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தொழிலாளர் கொள்கை நியாயமான, ஜனநாயக இயக்கங்களில் போலீஸ் தலையீடு இருக்கக் கூடாது என்று அறிவிக்கப்பட்டு, எமது கட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொழிலாளர் அமைச்சகத்தால் அது அமுல்படுத்தவும்பட்டது. முதலாளித்துவ கட்டமைப்பில் அமைக்கப்படும் ஒரு உண்மையான மக்கள் சார்பு அரசாங்கத்தை வழிநடத்தும் அடிப்படை அரசாங்க அணுகுமுறையை உலக முழுவதும் உள்ள இடதுசாரி ஜனநாயக சக்திகளுக்கு அளிப்பதையும் குறிக்கோளாகக்கொண்டு முதலாளித்துவத்தின் இறுதி தூக்கியெறிதலையும் அரசு இயந்திரத்தின் தலையீட்டிலிருந்தும் அடக்குமுறையிலிருந்தும் விடுதலை பெற்ற வெகுஜன மற்றும் வர்க்க போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதை நோக்கமாக கொண்டிருந்த அக்கொள்கையானது மாநிலத்தில் தொழிற்சங்க இயக்கங்களுக்கும் தொழிலாளிவர்க்க போராட்டங்களுக்கும் ஒரு பிரம்மாண்டமான ஊட்டத்தையும் அதேபோல நாட்டின் பிற பகுதிகளுக்கு உந்துதலையும் அளித்தது. யதார்த்தமாகவே இது ஆளும் முதலாளிவர்க்கத்தை குலைநடுங்கச் செய்தது. எமது கட்சிக்கு எதிராகவும் எமது கட்சியின் முதல் மத்தியக்கமிட்டி உறுப்பினரும் முதல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தொழிலாளர் அமைச்சருமான மறைந்த தோழர் சுபோத் பேனர்ஜி அவர்களுக்கு எதிராகவும் திரைமறைவில் சதிசெய்து, ஐக்கிய முன்னணிக்கு உள்ளும் புறமும் அவர்களுடைய ஏஜெண்டுகளை தூண்டிவிட்டு அவ்அரசாங்கத்தை அது அமைக்கப்பட்ட ஏதே மாதங்களில் கவிழ்த்தனர்.

### போலி மார்க்சிஸ்டுகளின் துரோகம்

அதுமுதற்கொண்டு, நிகழ்வுகள், ஒரு வேறுபட்ட திருப்பத்தை எட்டின. சூழ்ச்சியுடன் ஒரு சதிவலையைப் பின்னி சிபிஐ(எம்)மும் அதன் கூட்டாளிகளும் ஐக்கிய முன்னணியிலிருந்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை வெளியேற்றினர். ஆளும் முதலாளி வர்க்கத்தின் நம்பிக்கையைப் பெற்றவர்களிடையே புதிய நண்பர்களை தேடி முதல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் தொழில் குழுமங்களுக்கு ஏற்பட்டதைப் போன்ற அனுபவம் மீண்டும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தை அவர்களுக்கு அளித்து, அதன்மூலம் 1977ல் அரசு அதிகாரத்தை கைப்பற்றினர்.

பணத்திற்கும் பதவிக்கும் ஆசைகொண்டு சிபிஐ(எம்), சிபிஐ போன்ற போலி மார்க்ஸிஸ்டுகளும் அவற்றின் தொழிற்சங்கங்களும் தங்களுடைய சமூக ஜனநாயகவாத குணத்தை வெளிக்காட்டினர். அவை மெல்ல மெல்ல போர்குணமிக்க தொழிற்சங்க பாதையை கைவிட்டதோடு வர்க்கக் கூட்டுறவு குறித்த ஆபத்தான கருத்தியலை முன்மொழிந்ததுடன் உழைப்பிற்கும் மூலதனத்திற்குமிடையிலான வளரவேண்டிய ஒத்துழைப்பு குறித்தும் வலியுறுத்தினர். "இடதுசாரி சக்திகள்" பதவியில் இருப்பதால் தொழிலாளிவர்க்கமும் மக்களும் அரசாங்கத்தின் நிலைத்தன்மைக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய போராட்டப் பாதையை கைகொள்ளத் தேவையில்லை என தங்கள் கட்சிகளுடன் இணைந்த தொழிற்சங்கங்களுக்கு சிபிஐ(எம்), சிபிஐ மற்றும் அவற்றின் கூட்டாளிகளும் மற்றும் அவற்றின் தொழிற்சங்கத் தலைவர்களும் தீவிரமாக போதிக்க ஆரம்பித்துவிட்டனர். அது மட்டுமின்றி, தொழிலில் அமைதியை உத்தரவாதப்படுத்த முதலாளிகளுக்கு தொழிலாளர்கள் ஒத்துழைப்பை நல்கவேண்டும், பேச்சு வார்த்தை மற்றும் அரசாங்க தலையீடு, அறிவுறுத்தலுக்கிணங்கிய ஒப்பந்தங்களின் மூலம் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் எனவும் போதித்தார்கள். அவர்களுடைய கட்டுப்பாட்டிலுள்ள பெரும்பான்மை தொழிற்சங்கங்களை வைத்து இத்தகைய சீர்திருத்தவாத – திருத்தல்வாத அணுகுமுறையில் தொழிற்சங்க இயக்கத்தை மூழ்கடித்து அவ்வியக்கத்தை பெருமளவு இளைக்கச் செய்துவிட்டனர். இதன் விளைவாக பொருளாதாரவாதம், சந்தர்ப்பவாதம் மற்றும் பிற கேடுகெட்ட பூர்ஷ்வா கலாச்சாரம் போன்றவை தொழிலாளிவர்க்க மற்றும் தொழிற்சங்க இயக்கங்களை ஆதிக்கம் கொள்ள ஆரம்பித்தன. இதனால் தனிப்பட்ட ஆதாயம், சலுகை, அற்ப ஆதாயம், பேராசை போன்றவற்றால் தொழிலாளர்கள் தலைவர்கள் என்றழைக்கப்படுபவர்களின் பின்செல்வது போன்றவை பாட்டாளி வர்க்கத்தையும் தொழிற்சங்க இயக்கங்களையும் ஆட்கொல்ல செய்தது. இது மனிதனை மனிதத்தன்மையற்றவனாக்குவது போராடும் உறுதியை குலைப்பது, சுயமரியாதையை அழிப்பது ஆகியவற்றை உருவாக்கச் செய்தது. மிகச்சரியாக தொழில்குழுமங்கள் மற்றும் கார்ப்பொரேட் துறையினர் இதைத்தான் விரும்பினர்.

எனவே, இந்தப் போக்கில் சிபிஐ(எம்) தலைவர்களும் அவர்களின் அடிவருடிகளும் உள்நாட்டு வெளிநாட்டு மூலதனங்களுக்கு மிக நெருக்கமானவர்களாகிவிட்டனர். இந்த நெருக்கம் மிக வலிமையாக மாறி காங்கிரஸ், பிஜேபி மற்றும் பிற பூர்ஷ்வா கட்சிகளின் அரசாங்கங்களைப் போலவே தொழிலாளர் போராட்டங்களை, ஜனநாயக இயக்கங்களை கொடூரமாக நசுக்குவது மட்டுமல்ல, நாட்டின் உயர்மட்ட ஏகபோகங்களின் ஒருவரான "டாடாவின் ஒரு முடியைக் கூட தொட முடியாது" என வரலாற்றுச் சிறப்புமிக்க சிங்கூர் இயக்கத்தின் போராடும் விவசாயிகளை பகிரங்கமாக மிரட்டும் அளவிற்கு சிபிஐ(எம்)மின் முதலமைச்சர் சென்றார். பின்பு, 'தொழில்மயம்' எனும் திரைமறைவை உருவாக்கி, முதலாளித்துவ உலகமயத்தால் வடிவமைக்கப்பட்ட தொழிலாளர்களையும் தொழிலாளிவர்க்க இயக்கத்தையும் கொல்லும் ஒரு கொலைகளமான சிறப்பு பொருளாதார மண்டலங்களை நந்திகிராம் மற்றும் பிற இடங்களில் நிறுவ அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, கேடுகெட்ட பெயரெடுத்த யுஎஸ் பன்னாட்டு கம்பெனிகள் உட்பட, அந்நிய முதலீட்டிற்கு சிவப்பு கம்பளம் விரித்தனர்.

### சுரண்டல் முதலாளித்துவவாதிகளின் பெருமகிழ்ச்சி

இவையெல்லாவற்றின் ஒன்றுகுவிந்த பாதிப்பு தொழிலாளிவர்க்க இயக்கத்தினை சூழ்ந்து விரக்தி, தலைவிதிவாதம், தோல்வி மனப்பான்மை ஆகியன போராடும் உணர்வின் மீது, உத்வேகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தின. பாதுகாப்பின்மை பயத்தால் சூழப்பட்ட ஆளும்வர்க்கம் மற்றும் சுரண்டும் முதலாளித்துவ அமைப்புடன் எப்போதும் அவர்களை கட்டிவைத்திருக்கக்கூடிய ஆளும் வர்க்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# உழைக்கும்வர்க்க இயக்கத்தை அழிக்கவும் பலவீனப்படுத்தவும் அனைத்து சதிகளும் புனையப்படுகின்றன

5ம் பக்கம் தொடர்ச்சி

கத்தின் ஏஜெண்டுகளின் சூதை புரிந்துகொள்ளுமளவிற்கு அரசியல் விழிப்புணர்வு பறிக்கப்பட்ட, முன்னுரிமை தேடும் மனநிலைக்கு பலியாகி விழிப்புணர்வை இழந்து, ஆளும் கட்சிகளுடன் தொடர்புகொண்ட "சக்திவாய்ந்த" என யூகித்து அத்தகைய தலைவர்களுக்குப் பின்னால் குருட்டுத்தனமாக ஓடியும் நிர்வாகத்திற்கு பயந்தும் பொருளாதாரவாதம் – சந்தர்ப்பவாதத்தின் வியாபாரிகள் விரிக்கும் வலையில் நிராதரவான தொழிலாளர்கள் விழுந்துவிடுகிறார்கள். எனவே, இதுபோன்ற தலைவர்கள் பாதுகாப்பையும் சில சலுகைகளை பறித்தும் தங்களுக்கு தருவார்கள் என தொழிலாளர்கள் யூகிக்கிறார்கள்.

தொழிற்சங்கத் தலைவர்கள் என்றழைக்கப்பட்ட இவர்கள் இத்தகைய அந்தஸ்தை அனுபவிக்கிறார்கள். இத் தலைவர்கள் இந்த நிலையை தக்கவைத்துக்கொள்வதற்காக அவ்வப்போது நிர்வாகத்தை கடுமையாக எதிர்ப்பதுபோல் பாசாங்கு செய்கிறார்கள். மயிர்ச்சிலிர்க்கும் சில சொற்பொழிவுகளை ஆற்றுகிறார்கள். இங்குமங்கு மானதும் தனித்ததுமான சில பாவனைப் போராட்டங்களையும் எடுத்து தொழிலாளர்களை முட்டாள்களாக்குகிறார்கள். இத்தகைய தலைவர்களைத்தான் மாபெரும் லெனின் 'தொழிலாளர் பிரபுக்கள்' என அழைத்தார். ஆளும் வர்க்கத்தின் மகிழ்ச்சிக்கிணங்க ஒன்றுபட்ட விழிப்புணர்வு பெற்ற தொழிலாளிவர்க்க இயக்கத்தை சர்வ ஜாக்கிரதையாக தவிர்ப்பது மட்டுமல்ல அப்பாதையில் துளையை ஏற்படுத்துகிறார்கள். பதிலுக்கு ஆளும் வர்க்கத்தின் ஆதரவு பெற்று தொழிலாளர்களின் தலைவர்களாக இவர்களே நீடித்திருக்கிறார்கள். தொழிலாளிவர்க்கத்திடமிருந்து எந்த வெல்லற்கரிய எதிர்ப்பு இயக்கங்களும் இல்லாத சூழ்நிலையில் போராட்டத்தின் கூர்மையை மழுங்கடிக்கச் செய்து, இரக்கமற்ற சுரண்டல் நீடிக்க எளிதாகிறது. இந்தியாவில் தொழிற்சங்க இயக்கத்தின் தற்போதைய விரிவான காட்சி இதுவேயாகும்.

### தொழிலாளிவர்க்கத்தின் மீதான புதிய தாக்குதல்களின் திட்டவரைபடம்

தொழிலாளிவர்க்க இயக்கத்தை அழிக்கவும் போராடி பெற்ற உரிமைகள் மற்றும் பலன்களை அபகரிக்கவுமான அவர்களுடைய தீர்மானகரமான திட்டத்தில், முதலாளிவர்க்கமும் அவர்களுடைய அடியாட்களும் மிக அதிகபட்ச லாபத்தை ஈட்ட அவர்களுடைய இரக்கமற்ற சுரண்டலை தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆளும் பூர்ஷ்வாக்கள் புதிய ஆயுதங்களை தருவித்து தொழிலாளர்களை இறுக்கி தங்களுடைய சுரண்டல் ஆட்சியை ஸ்திரப்படுத்திக்கொள்ள கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

*1)* மிக அதிகபட்சமாக நிரந்தர வேலைகளை நீக்குதல், ஒப்பந்தத் தொழிலாளர் முறைக்கு மாறுதல் மற்றும் அற்பதொகைக்கு தினக்கூலி தொழிலாளர்களை அமர்த்துதல்.

*2)* அமைப்பு ரீதியான தொழிற்சங்க இயக்கத்தை குறிப்பாக கூட்டுபேர முறையினை அழித்தல். அதன்மூலம் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்கவைக்க வேலை நிறுத்தம் செய்வது உட்பட உடைமையாளர்கள் மற்றும் வேலையளிப்போரின் மீது அனைத்து வகையான கூட்டு நிர்ப்பந்தத்தை அளிக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளை பயனற்றதாக்குதல்.

*3)* பெரும் எண்ணிக்கையில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவுதல்; இங்கு பொருந்தக்கூடிய தொழிற்சங்க சட்டங்கள் உட்பட பணியின் அனைத்து ஸ்தாபிக்கப்பட்ட நியமங்களையும் முடக்கி, ஒப்பந்த மற்றும் 'ஹையர் அண்ட் ஃபையரில்' தொழிலாளர்களை நியமிப்பதை பிரதான கோட்பாடாகக் கொண்டிருத்தல்; இங்கு எந்த நியாயமான தொழிலாளிவர்க்க இயக்கமும் எழாமலும் அல்லது அது ஒரு வடிவமெடுக்க விடாமலும் இருப்பதை உறுதிசெய்ய தேவையான அனைத்து நிர்வாக, சட்ட மற்றும் ஒடுக்குமுறை ஆயுதங்களை கூர்மைபடுத்திக் கொள்ளுதல்.

ஆளும் வர்க்கம் நன்கு திட்டமிட்டு தன் சூழ்ச்சியை நிறைவேற்ற முயலும் சமயத்தில் தம்மை தாமே மார்க்சிஸ்டுகள் – இடதுசாரிகள் என அழைத்துக் கொள்பவர்கள் அனைத்து சக்திகளையும் ஒன்றிணைக்க வேண்டும் என்ற பிரபலமான கோஷத்தை எழுப்பி, இயக்க விரோத, முதலாளித்துவ ஆதரவு சக்திகளையும் ஊடுருவச் செய்து, சில நேரங்களில் நாட்டாமையும் செய்து, அதன்மூலம் அந்த ஒன்றுபட்ட இயக்கத்தை ஒரு நாடகமாக தாழ்த்தி விடுகிறார்கள். இவ்வாறு தொழிலாளர்கள் ஏமாற்றப்படும்போது, தன்மீது எந்த நிர்ப்பந்தமும் எழாததை கண்டுகொண்ட அரசாங்கம் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவது குறித்து யோசிப்பதில்லை. அபாயம் இங்குதான் உள்ளடங்கி இருக்கிறது.

### வர்க்க விழிப்புணர்வுகொண்ட தொழிலாளிவர்க்க இயக்கம் புத்துயிர்பெற்று எழவேண்டும்

சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் தொழிலாளர்களின் ஒளிபடைத்த பலப்போராட்டங்கள், பலத் தியாகங்கள், பல உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆனால், இறுதியில் பிற்போக்கு சக்திகள்தான் இதன்மூலம் வலிமையடைந்தன. ஏனெனில், முதலாளித்துவத்தை தூக்கியெறிவதற்கான ஒரு எதிர்ப்பு போரை அல்லது புரட்சிகரப்போரை துவக்க முடிந்த அல்லது நடத்தமுடிந்த போக்கில் தங்கள் சொந்த அரசியல் அதிகாரத்தை பெற்றெடுப்பதற்கு பொருந்துகிற வகையில் பொருளாதார மற்றும் ஜனநாயகக் கோரிக்கைகள் மீதான தொழிலாளிவர்க்க இயக்கங்கள் வளர்த்தெடுக்கப்படவில்லை. எனவே, சீர்திருத்தவாதம் – திருத்தல்வாதம் – மரபுவாதம் ஆகியவற்றின் குறுகிய எல்லைக்குள்ளும் கேடுகெட்ட பூர்ஷ்வா கலாச்சாரத்தினுள்ளும் தொழிற்சங்க இயக்கங்கள் முடங்கின. தொழிலாளிவர்க்கம் இந்த விஞ்ஞானபூர்வ உண்மையை உட்கிரகிக்க வேண்டும். பூர்ஷ்வா பழக்கங்கள் மற்றும் நோய்களின் விலங்குகளிலிருந்து, ஏமாற்று மற்றும் திரிபுகளிலிருந்து விடுபடாதவரை நாம் விரும்பும் விடுதலை என்பது வராது என்பதை அனைத்துவகை சுரண்டல்களிலிருந்தும் விடுபட்ட புதிய நாகரீகத்தின் முன்னறிவிப்பாளன் என்ற முறையில் தொழிலாளிவர்க்கம் உணரவேண்டும். சித்தாந்த ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான விழிப்பு, வாழ்வின் அடிப்படை பிரச்சினைகளுக்குக்கான அணுகுமுறை குறித்த குழப்பங்கள், திரிபுகள் மற்றும் பல்வேறு ஊசலாட்டங்கள் ஆகியவற்றை புறந்தள்ளி, மாயையிலிருந்து விடுபட்ட உண்மையை தீர்மானிக்கும் விஞ்ஞானத்தில் நிபுணத்துவம் பெற்று, சந்தர்ப்பவாதத்தின் அனைத்து நிறங்களையும், சீர்த்திருத்தவாதம் மற்றும் வர்க்க கூட்டுறவு ஆகியவற்றை எதிர்த்து போராட வேண்டியது தொழிலாளிவர்க்கத்திற்கு மிகவும் அவசியமானதாகும். அதற்காக சரியான புரட்சிகர அமைப்பின் பதாகையின்கீழ் அவர்கள் அணிதிரள வேண்டும்.

மார்க்ஸும் லெனினும் திரும்பதிரும்ப எச்சரித்த தொழிற்சங்கமென்பது 'கம்யூனிஸத்தை கற்றுக்கொள்ளும் பள்ளி' என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இதன்மூலம், இருவரும் அர்த்தப்படுத்தியது தொழிற்சங்கங்கள் எனும் பொது மேடையிலிருந்து கூட்டாக போராடும் பொழுது, புரட்சியின் மூலம் இந்த ஒடுக்குமுறை முதலாளித்துவ அமைப்பை தூக்கியெறியாமல் விடுதலை சாத்தியமில்லை, அப்புரட்சியை வெற்றியடையச்செய்ய சரியான தலைமையின்கீழ் சரியான திசைவழியில் போராடுவது அவசியம் என்பதைத்தான் "தொழிற்சங்கம் இல்லாமல், தொழிற்சங்கம் மற்றும் உழைக்கும் வர்க்கக்கட்சியின் இடையே பரஸ்பர செயல்பாடு இல்லாமல் உலகின் எந்த மூலையிலும் "பாட்டாளிவர்க்கம் வளரவுமில்லை, வளரவும் முடியாது" என லெனின் எழுதினார். (தேர்வு நூல் தொகுதி 41, பக். 33–34)

### தொழிலாளர்கள் சரியான தலைமை மற்றும் சரியான ஸ்தாபனத்தை அடையாளம் கண்டு கொள்ளவேண்டும்

இந்தியாவில், வெளிப்படையாக அல்லது மறைமுகமாக அனைத்துக் கட்சிகளும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு முழுமையாக சரணடைந்துவிட்ட நிலையில் மார்க்சிசம் – லெனினிசம் – சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் போதனைகளை ஆயுதமாகக்கொண்டு, உண்மையான இடதுசாரித்தனத்தின் பதாகையை உயர்த்திப்பிடிப்பதன் மூலம் புரட்சி எனும் கனவை மெய்ப்பிக்க தன்னந்தனியாக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியே போராடி வருகிறது. அதன் தொழிற்சங்க அணியான ஆல் இன்டியா யுனைடெட் டிரேட் யூனியன் சென்டர் (AIUTUC) 1949ல் அது துவக்கப்பட்ட நாள் முதல் நியாயமான கோரிக்கைகளுக்காகவும் தொழிலாளிவர்க்கத்தை பாதிக்கும் முக்கிய பிரச்சினைகளுக்காகவும் ஒன்றுபட்ட செயற்பாட்டின் மூலம் தொழிலாளிவர்க்க ஐக்கியத்தைக் கட்டி பல்வேறு தொழிலாளிவர்க்க போராட்டத்தை வளர்த்தெடுக்க வளமிகுந்த போராட்டங்களில் ஈடுபடும்போது தொழிலாளர்களிடையே புரட்சிகர விழிப்புணர்வை ஊட்டி வளர்க்கவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது. அடிமட்டத்திலிருந்து ஒன்றுபட்ட தொழிலாளிவர்க்க போராட்டங்களின் பரந்துபட்ட மேடையாக இருக்கக்கூடிய கூட்டு போராட்ட வடிவங்களையும் கட்டுவதில் கடந்தகாலத்தில் முயற்சித்தது போலவே, தற்பொழுதும் கடுமையாக முயற்சித்து வருகிறது. இந்த போக்கில், உணர்வு மற்றும் உண்மையான போராட்ட திட்டம் ஏதும் இன்றி கூட்டு தொழிற்சங்க போராட்ட இயக்கத்தை பல அமைப்புகளின் வெறும் கூட்டணியாக மாற்றும் போலி மார்க்ஸிஸ்டு – இடதுசாரிகளின் சந்தர்ப்பவாத முகமூடியை கிழிக்க ஏஐயுடியுசியானது தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. ஒன்றுபட்ட போராட்டத்தின் மத்தியில் புரட்சிகர விழிப்புணர்வை தொழிலாளர்கள் பெறமுடியும் என நம்புகிறது. சரியானதையும் தவறானதையும் அடையாளம் கண்டு, சமரசமான மற்றும் சமரசமற்ற தலைமைக்கிடையிலான வேறுபாட்டை கண்டறிந்து புரட்சிகர தொழிலாளிவர்க்க இயக்கத்தினை நோக்கி மெல்ல மெல்ல தொழிலாளர்களால் முன்னேற முடியும் என ஏஐயுடியுசி நம்புகிறது.

சித்தாந்த ரீதியாக – கலாச்சார ரீதியாக வேலை உத்திரவாதம், நிரந்தர பயனுள்ள வேலை, வாழும் உரிமை, வாழ்வதற்கு ஏற்ற கூலி, தொழிற்சங்க மற்றும் பிற ஜனநாயக உரிமைகள், நாகரீக கௌரவமிக்க மனிதனாக வாழ்வதற்கான வேலை மற்றும் வாழ்நிலையை பெறும் உரிமை, எல்லாவற்றிற்கும் மேலாக சுரண்டல், ஏழ்மை, கௌரவமின்மை, அநீதிகள் ஆகிய ஆளும் முதலாளித்துவ வர்க்கம் மற்றும் அதன் அரசாங்கத்தின் தொடர்ந்து அதிகரித்துவரும் தாக்குதலுக்கு எதிராகவும் மற்றும் முதலாளித்துவத்தை புரட்சிகரமாக தூக்கியெறிந்து சோசலிசத்தை நோக்கி செல்ல பாட்டாளி வர்க்கம் தன்னை தயார்படுத்திக் கொண்டு மேலும் தங்களை ஒருங்கு திரட்ட வேண்டும். வர்க்க மற்றும் வெகுஜன போராட்டங்களை வளர்த்தெடுக்கும் போக்கில் தொழிலாளிவர்க்க இயக்கத்திலிருந்து அனைத்து சீர்த்திருத்தவாத – திருத்தல்வாத – சட்டவாத – பிளவுவாத – சமரசவாத சக்திகள் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

போராடி ஈன்ற உரிமைகளை காத்துக்கொள்ள ஆளும் முதலாளிவர்க்க மற்றும் அதன் அரசாங்கங்களின் பல்முனை தாக்குதலை தடுத்து நிறுத்த சரியான தலைமையின்கீழ் போர்குணமிக்க தொழிலாளிவர்க்க போராட்டங்களின் புத்துயிர்ப்பு, மேலும் அணிதிரட்டப்பட்ட, எதிர்ப்பு இயக்கங்கள், கடினமான போராட்டங்களின் வருடங்களாக இனிவரும் வருடங்கள் இருக்கட்டும்!

தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் வார்த்தைகள் நாடு முழுவதும் எதிரொலிக்கட்டும்: "நீங்கள் போராட வேண்டும். போராடாமல் இருக்கக் கூடாது. இந்தப் போராட்டங்கள் ஒன்றுமில்லாமல் போகலாம் என்றுகூட இன்று நீங்கள் நினைக்கலாம். நாளை மறுநாள் போராட்ட களத்திற்கு வர வேண்டியதிருக்கும். எச்சரிக்கைகள் ஏற்கெனவே இருக்கின்றன. ஆயிரக்கணக்கானோர் களத்தில் குதிக்கலாம், சண்டையிடலாம், ஆனால் மாற்றம் என்பது தொலைதூரத்திலேயே இருக்கும். இந்த மாற்றங்கள் நிகழ மூன்று விஷயங்கள் உங்களை வேண்டுகிறது – சரியான அடிப்படை அரசியல் வழி, சரியான புரட்சிகர கருத்தியல், ஒரு உண்மையான புரட்சிகர கட்சி. நீங்கள் இதை தவறவிட்டால், உங்கள் பாதை தவறானால் பின்பு உங்கள் நேர்மை, சுயதியாகம், போராட்டம் ஆகிய அனைத்தும் இருந்தும், நீங்கள் முன்னேற முடியாது."

## தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களின் அறைகூவல்

# பாலியல் குற்றவாளிகள் முதலாளித்துவத்தின் பிரசவ அறையில் பிறக்கிறார்கள்

*1ம் பக்கம் தொடர்ச்சி*

வேண்டுமென மீண்டும் மீண்டும் அவள் கோரினாள். ஆனால் உண்மையான குற்றவாளிகள் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்களா? இதுதான் நமது மனசாட்சி எதிர்கொள்ளும் கேள்வியாகும்.

அதிபயங்கரமான இக்குற்றத்தைப் புரிந்தவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்க வேண்டுமென நாங்கள் கோருகிறோம். அதற்கு கடுமையான சட்டம் இருக்க வேண்டும் என விரும்புகிறோம். அதே சமயம், எவ்வளவுதான் சட்டமும் தண்டனையும் கடுமையாக இருந்தாலும் பாலியல் பலாத்காரமும் கும்பல் பாலியல் பலாத்காரங்களும் தொடர்ந்து அதிகரிக்கின்றன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் இம்மண்ணில் பாலியல் வன்கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. சிறுமிகளையும் விட்டு வைப்பதில்லை. இதை நாம் நாகரீகம் என்றால் எதனை நாம் காட்டுமிராண்டித்தனம் எனக் கூறுவது? பல ஆயிரக்கணக்கான மகளிர் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவார்கள். அதில் பலர் உயிரிழப்பார்கள், எஞ்சி உயிர்வாழ்பவர்கள் பாதி உயிர் பிரிந்தவர்களாக இருந்து கொண்டிருப்பர். பாலியல் வன்கொடுமை என்ற கொடூரத்திற்கு நிரந்தரத் தீர்வு ஏதேனும் வரும்வரை இக்காட்சியில் மாற்றமிருக்காது.

பாலியல் வன்கொடுமைக்கு பலியான ஆதரவற்ற அப்பெண்ணுக்காக இந்தத் தருணத்தில் நாட்டின் 'மேல் மட்ட' தலைவர்கள் முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் முன்பெல்லாம் நடந்ததைப் போலவே இச்சம்பவமும் விரைவில் அமிழ்ந்து, கொதிக்கும் மக்களின் கோபம் அடங்கி மறைந்துவிடும் என அவர்கள் தமது அடிமனதில் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். சில வாரங்களிலேயே கோலாகலமாக ஜனவரி **26** அன்று குடியரசு தினம் கொண்டாடப்படும். 'கவர்ந்திழுக்கும்' இத்தலைவர்களின் 'சிறப்பான' வருகையின் முன் உலகத்தின் மிகப்பெரிய ஜனநாயகத்தின் வெற்றியை பீரங்கிகள் காது கிழிய பறைசாற்றிக் கொண்டிருக்கும். நாடு எவ்வளவு வேகமாக 'முன்னேறி வளர்ந்து கொண்டிருக்கிறது' என்பதை பெருமையுடன் அவர்கள் கண்கொள்ளாக் காட்சியாகக் காண்பித்துக் கொண்டிருப்பார்கள். ஜனாதிபதி மாளிகை, அமைச்சக அலுவலகங்கள், செயலக கட்டிடங்கள் எல்லாம் பிரமாண்டமாகச் ஜோடிக்கப்பட்டு ஜொலித்து கொண்டிருக்கும். ஜொலிக்கும் இக்காட்சிகளில் இன்றைய துயரமும் சோக மனநிலையும் அடக்கப்பட்டுவிடக்கூடும். இத்திருவிழாக் கொண்டாட்டத் திரைக்குப்பின்னால் பரவிவரும் இருளாக நாட்டின் ஓலங்களும் துன்பக் குரல்களும் இருந்து கொண்டிருக்கும். நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் தொழிலதிபர்களும் பெரும் வணிகர்களும் முதலமைச்சர்களும் பெரிய அரசியல் கட்சித் தலைவர்களும் பலவகையான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளிலும் **5** நட்சத்திர விடுதியின் சொகுசு விருந்திலும் மூழ்கி சுதந்திரத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது, போக்கிரிகள் என வழக்கமாக அழைக்கப்படும் பட்டினி கிடக்கும் வீதி குழந்தைகள் பல நாட்களாக பசியுடனும் இருப்பிடமின்றியும் சில்லிடும் குளிரைத் தாங்க துணிகளும் இல்லாத – இக்குழந்தைகள் விருந்தின் எச்சிலைகளை அருகமைக் குப்பைத் தொட்டிகளில் தேடிக் கொண்டிருப்பார்கள். வாழ்க்கைச் சூறாவளியில் சிதறித் தொடர்பறுந்துவிட்ட இக்குழந்தைகளுக்குத் தங்கள் பெற்றோர் எங்கே, தாங்கள் தொலைக்கப்பட்டது எவ்வாறு எனத் தெரியாது. வேலை வாய்ப்பற்றோர், அரை மனித நிலையில் வேலை செய்வோர், பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள், புலம்பெயர்ந்த ஏழை விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் என நாட்டில் எண்ணிக்கையில் பல இலட்சக் கணக்கில் பெருகி வருகின்றனர். போதிய மருத்துவ வசதியின்றி பட்டினியில் ஒவ்வொரு ஆண்டும் பல இலட்சக்கணக்கில் இறக்கின்றனர். நாள்தோறும் அணுஅணுவாகச் சாவதை விட ஒரேயடியாக உயிரை விட்டுவிடலாம் என பலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். பட்டினியால் குழந்தைகளின் அழுகுரலைக் கேட்கப் பொறுக்காமல் இலட்சக்கணக்கானப் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபட ஆரம்பிக்கின்றனர். பெண்களும் சிறுமிகளும் விற்கப்படும் எண்ணிக்கை அபாயகரமாக அதிகரிக்கின்றது. இக்காட்சிகள் மிகவும் பீதியூட்டக்கூடியதாக ஆழ்ந்த வேதனையளிப்பதாக உள்ளன. மறுபுறத்தில் வெகுசில எண்ணிக்கையில் இருக்கக்கூடிய முதலாளிகளும் பெரும் வணிகர்களும், முன்பு ஆங்கிலேயே ஏகாதிபத்தியவாதிகள் செய்ததைப்போல் நாட்டை கொள்ளையடித்து நாட்டின் செல்வங்கள் முழுமையையும் அபகரித்துக் கொழித்துக் குதூகலிக்கின்றனர்.

குதிராம், பகத்சிங், சந்திரசேகர் ஆசாத், அஸ்ஃபக்குலாஹ், சூரியாசென், ப்ரீத்தி லதா மற்றும் எண்ணற்ற தியாகிகள் தங்கள் இன்னுயிரை ஈந்தது இத்தகைய சுதந்திரத்திற்குத் தானா? நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டம் இச்சுதந்திரத்திற்காகத் தானா? மூர்க்கத்தனமாக பெண்கள் பலாத்காரம் செய்யப்படுவார்கள் என்பது போன்ற கொடுமையான நிலைதான் அரசியல் விடுதலை பெற்ற இந்தியாவில் இருக்கும் என தங்கள் கனவின் விளிம்பிலாவது அவர்கள் நினைத்தார்களா? அப்படியெனில் இது யாருடைய சுதந்திரம்? வெட்ட வெளிச்சமாகவே, இச்சுதந்திரம் கேட்பார் பயமின்றி மக்களைச் சுரண்டி ஒடுக்குவதற்கு ஏகபோகவாதிகளுக்கும் பெரும் வியாபாரிகளுக்கும் இருக்கும் சுதந்திரமாகும். தங்கள் இஷ்டம் போல் கொலை – பாலியல் பலாத்காரம் – கொள்ளை நடத்த இவர்களால் உருவாக்கப்பட்டு தீனி போட்டு வளர்க்கப்படும் கிரிமினல்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் இருக்கும் சுதந்திரமாகும். காங்கிரஸ், பாஜக, சிபிஐ(எம்), திரிணாமூல் காங்கிரஸ், எஸ்பி, பிஎஸ்பி, திமுக, அதிமுக, ஜனதாதளம் (யு), பிஜு ஜனதாதள் (பிஜேடி) ஆகிய பாராளுமன்றக் கட்சிகள் எல்லாமே இந்த முதலாளித்துவ வர்க்கத்தின் அடிமைகளாகும். முதலாளிகளின் பணபலத்தைக் கொண்ட இக்கட்சிகளில் எது அரசாங்க ஆட்சிக்கட்டிலில் அமரும் வாய்ப்பைப் பெற்றாலும் அது தனது எஜமானனுக்கு உற்சாகமான அரசியல் மேனேஜராக சேவை செய்கின்றது. அதிகார வேட்கை கொண்ட இந்த அரசியல் கட்சிகளுக்குள் நடக்கும் பரஸ்பர சண்டைகள், மோதல்கள், சச்சரவுகள் எல்லாமே அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் கொண்டவவையேயாகும். எதனை பதவிக்குக் கொண்டு வந்தாலும் தங்களின் சுயநலத்திற்காக மக்கள் பணத்தை சுருட்டவே செய்கின்றன. அனைத்துமே ஊழலில் மூச்சுமுட்டும் வரை மூழ்கியிருக்கின்றனர்.

இக்கட்சிகளின் எதன் ஆட்சியிலும் பாலியல் வன்கொடுமை தினசரி நிகழ்ச்சிகளாகும். இவர்கள் ஒவ்வொருவருமே தங்கள் ஆட்சியில் நடைபெறும் பாலியல் வன்கொடுமை சம்பவத்தை ஒன்று, மறுப்பார்கள் அல்லது ஒன்றுமில்லை என்று மௌனம் சாதிப்பார்கள் அல்லது அதனை ஜோடித்த கற்பனை என்று ஒதுக்குவார்கள் அல்லது தனது ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த செய்த முயற்சி என்று புறக்கணிப்பார்கள். இன்று இவர்கள் அனைவருமே அடுத்த தேர்தலைக் கருத்தில் கொண்டு இச்சம்பவத்திலிருந்து எவ்வளவு பலன்களைப் பெறமுடியும் என்று கணக்கிட்டு ஊடகங்களின் முன்பு கண்ணீர் வடிக்கின்றார்கள். பெண்களைப் பற்றிய இவர்களின் பார்வை எத்தகைய மரியாதைக் குறைவானது என்பதை கண்ணியத்தின் குறைந்தபட்ச எல்லையையும் மீறும் விதத்தில் பேசிய அவர்களின் சமீபத்திய பேச்சுக்களே சாட்சியாகும். குஜராத்தின் முதல் மந்திரி எதிர்கட்சியை சார்ந்த ஒருவர் '50 கோடி ரூபாய் மதிப்புள்ள பெண் நண்பரை (கேர்ள் பிரண்ட்) வைத்திருக்கிறார் என்று ஒரு கருத்தைத் தெரிவித்தார். டெல்லி மக்களின் பொங்கிவரும் கோப அலையைக் கண்டு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான இந்திய ஜனாதிபதியின் மகன் "மாணவர்கள் என்ற பெயரிலே இந்த கண்டன ஊர்வலங்களுக்கு வருபவர்கள் எல்லாம் வண்ணம் பூசிய அழகிகள்" என்று கருத்துத் தெரிவித்தார். கல்கத்தாவின் பார்க் ஸ்டிரீட் பாலியல் வன்கொடுமைக்குப் பலியான பெண்ணை கிட்டத்தட்ட விபச்சாரி என்று அழைக்கும் வகையில் திரிணாமூல் காங்கிரஸின் எம்.பி., 'இது பாலியல் வன்கொடுமை அல்ல, தனக்கும் தன் வாடிக்கையாளருக்குமிடையே விலை பேசுவதில் ஏற்பட்ட தகராறு' எனக் கூறினார். மேற்கு வங்கத்தின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய சட்டமன்ற எதிர்க் கட்சித் துணைத் தலைவருமான ஒரு சி.பி.ஐ. (மார்க்சிஸ்ட்) கட்சித் தலைவர் பொதுக்கூட்ட மேடையிலிருந்து ஆளும் மாநில பெண் முதலமைச்சரை நோக்கி 'நீங்கள் கற்பழிக்கப்பட்டால் அதற்கு நிவாரணமாக எவ்வளவு கட்டணம் கேட்பீர்கள்?' என்ற கேள்வியை வீசினார். இவர்கள் எல்லோருமே தத்தமது கட்சிகளில் தலைவர்களாக இருப்பவர்கள். வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான், ஆனால் ஒரே கலாச்சாரத்தைக் கொண்டவர்கள்.

ஒரு கட்டிடப்பணியில் ஈடுபட்டிருந்த ஏழைத் தொழிலாளர்களிடையே மனிதனின் குணங்கள் கிட்டத்தட்ட மறைந்து வருவதைக் கண்டு ஆழ்ந்த வேதனையுற்று மாபெரும் இலக்கியவாதி சரச்சந்திரர் பல ஆண்டுகளுக்கு முன்பே தனது புகழ்பெற்ற நாவல் 'ஸ்ரீகாந்தா'வில் எழுதினார்: "மனிதனின் மரணத்தைக் கண்டு நான் வேதனையுறவில்லை, ஏனெனில் ஒருவர் பிறந்துவிட்டால் ஒருநாள் இறந்து தானாக வேண்டும். மனித குணங்கள் இறப்பதைக் கண்டு தான் நான் அதிர்ச்சியுறுகிறேன். செல்வத்திற்காக பணக்காரர்களின் பேராசை மனிதர்களை இதயமற்ற விலங்குகளாக மாற்றியிருக்கின்றது. ஏன் இவ்வாறெனில், விலங்கின் நிலைக்கு ஏழைகள் கொண்டு வரப்படாவிட்டால் விலங்குகளைப்போல் அவர்களை வேலை செய்ய அவர்களை நிர்ப்பந்திக்க முடியாது என்பதை பணக்காரர்கள் அறிந்திருக்கிறார்கள்." முதலாளித்துவம் எவ்வாறு சிறந்த மதிப்புகளை, மெல்லிய உணர்வுகளை, காதலை, நேசத்தை மற்றும் தாராள மனப்பான்மையை எல்லாம் அழித்துக் கொண்டிருந்தது என்பதைக் கண்ணுற்றப் பிறகு அவர் அவ்வாறு எழுதினார். ஆனால் அவரும் அவருக்கு முன்தோன்றிய மற்றும் சமகாலத்தவர்களான ராஜாராம் மோகன்ராய், வித்யாசாகர், ஜோதிபா ஃபூலே, விவேகானந்தர், ரவீந்திரநாத் தாகூர், லாலா லஜபதிராய், பாலகங்காதர திலக், கோபபந்து, ஜோதி பிரசாத், சுப்பிரமணிய பாரதி, பிரேம்சந்த், நேதாஜி, நஸ்ரூல்

## டெல்லியில் மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து இயக்கம்

*தொடர்ச்சி 8ம் பக்கம்*




*படம் 1 : எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மற்றும் அதன் வெகுஜன ஸ்தாபனங்கள் டிசம்பர் 29, 2012 அன்று கொல்கத்தாவில் நடத்திய பிரம்மாண்டப் பேரணியில் இந்திய மறுமலர்ச்சி இயக்கத் தலைவர்களின் படங்களுடன் நடந்து செல்லும் மாணவிகள்; படம் 2 : புதுதில்லியில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தின் (ஏஐடிஎஸ்ஓ) தில்லி தலைவர்களில் ஒருவரான தோழர் ரித்து கௌஷிக் உரையாற்றுகிறார். தோழர் பிரகாஷ் தேவி, அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (ஏஐஎம்எஸ்எஸ்) அவர்களும் உரையாற்றினார்.*

Registered News Paper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :

பாட்டாளி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registar of Newspaper in India No : 62018/88

## தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களின் அறைகூவல்

# சரியான புரட்சிகர சித்தாந்தத்தின் துணிவுடன் போராட்ட இயக்கத்தின் கொதிப்பும் தீப்பிழம்பும் எங்கும் பரவவேண்டும்

*7ம் பக்கம் தொடர்ச்சி*

போன்றோர் இன்று நாட்டைச் சூழ்ந்திருக்கும் அகோரத்தையும், பெருகி வரும் பாலியல் பலாத்காரம் மற்றும் கூட்டு பாலியல் பலாத்காரம் போன்றவற்றை பார்க்க உயிர் வாழவில்லை.

அத்தகைய கொடூரங்கள் நடைபெறும் என்பதை அவர்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் நிலவிய பழமைவாத குருட்டுத்தனமான ஆணாதிக்க நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில், பால்ய விவாகம் (குழந்தைத் திருமணம்), சதி என்ற பெயரில் இறந்த கணவனின் உடல் தகனத்தில் உடன்கட்டை ஏற்றுதல், பலதார வாழ்க்கை, விதவைகளை இழிவாக நடத்துதல் போன்ற பழங் கால கொடூர சம்பிரதாயங்களும் நடைமுறை களும் இருந்தன. இவற்றைக் கண்டு கோபங் கொண்ட வித்யாசாகர் ஒருமுறை கூறினார், "எது சரி, தவறு என்ற உணர்வு நீக்கப்பட்ட, நேசமும் அன்பும் இல்லாத, ஆண்களால் இவ்வாறு கொடூரப்படுத்தப்படும் ஒரு நாட்டில் பெண்கள் பிறக்கவே வேண்டாம்." இன்று சமுதாயம் சிக்கி யிருக்கும் அவலங்களின் வீச்சைக் குறிக்கும் பலாத்காரம் கூட்டு பாலியல் பலாத்காரம் சம்பவங்களின் எண்ணிக்கை பெருகுவதைக் கண்டிருந்தால் அவரின் எதிர்வினை என்னவாக இருந்திருக்கும்?

மனிதக் குணங்களை ஆளும் பூர்ஷுவா வர்க்கம் தரைமட்டமாக்கி வரும் விதத்தைக் கண்டு, பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் மிகுந்த கவலையுடன் **36** வருடங்களுக்கு முன்பே கூறினார் : "ஒரு நாட்டின் மக்களோ ஒரு தேசமோ உணவின்றி, அரைப்பட்டினியில் இருந்தாலும் கொடூரமான சித்திரவதைகளைச் சந்தித்தாலும் அப்பொழுதும் கூட அவர்களின் தார்மீக வலிமை குறைந்து விடாமல் இருந்தால், உறுதியாக எழுந்து நின்று தலைநிமிர்ந்து ஒடுக்குமுறையையும் அநீதியையும் எதிர்த்துப் போராட முடியும்; இதனை ஆட்சி யாளர்கள் நன்கறிவர். நீதிநெறி, தார்மீக வலிமையை மக்கள் கொண்டிருக்கும் வரை வெகுஜன எழுச்சியின் பேரலையை எந்த அடக்கு முறை ஆயுத வரிசையும் அடக்க முடியாது என்பதை அவர்கள் அறிவர். எனவேதான் அவர்கள் தேசத்தின் தார்மீக முதுகெலும்பை அழித்தொழிப்பதில் குறியாக இருக்கின்றனர். முன்பிருந்த தலைசிறந்தவர்கள் மற்றும் புரட்சி யாளர்களின் பிரகாசமான பாரம்பரியத்தைத் துடைத்தெறிய முனைகின்றனர். சுதந்திரப் போராட்டக் காலத்தில் மற்றும் மறுமலர்ச்சிக் காலத்தில் எட்டப்பட்டிருந்த மிக உயர்ந்த கலாச் சாரத்தரத்திலிருந்து துண்டித்து வேரற்றவர்களாக மக்களை குறிப்பாக மாணவர்களை இளைஞர் களை ஆக்குகின்றனர்.

மாறாக ஆட்சியாளர்கள் இளைஞர்களை தீமைகொண்ட தனிமனிதவாதம், சுயநலம், வக்கிர நுகர்வுக் கலாச்சாரம் என்ற படுகுழியில் தள்ளுவ தோடு குடி, சூதாட்டம், ஆபாச ஆட்டங்கள், ஆபாச இலக்கியங்கள், நீலத்திரைப்படங்கள் மற்றும் இதுபோன்ற சாதனங்களின் மூலம் சீரழிந்த கலாச் சாரத்தை பெருமளவு பரப்பி அனைத்து வகை பாலியல் வக்கிர உணர்வுகளிலும் தள்ளுகின்றனர். இவ்வாறு, கலாச்சாரத்தையும் தார்மீக அடிப் படையையும் அழிப்பதும் இளைஞர்களின் சிந்தனையை மாசுபடுத்துவதும் முதலாளித்துவ எதிர்ப்புப் புரட்சியின் பயத்தால் பீடிக்கப்பட்ட ஆளும் பூர்ஷுவா வர்க்கத்தின் இன்றைய வர்க்கத் தேவையாக இருக்கின்றது.

எனவே சூழ்நிலை இன்று மிகவும் படுமோசமாக மாறிவிட்டது. உண்மையான, மனிதராக இருப்பவர் மட்டுமல்ல, விலங்குகள் கூட பலாத்காரத்தில் கூட்டுப் பலாத்காரத்தில் ஈடுபடுவதில்லை. எனவே, இந்த பாலியல் பலாத்காரத்தை பிரயோகிப்பவர்கள் மனிதனைச் சேர்ந்தவர்களும் அல்ல, விலங்கினத்தைச் சேர்ந்தர்களும் அல்ல. மனிதரல்லாத, மனித உருவில் இருக்கின்ற இக் கயவர்கள் எந்தவொரு தாயின் கருவறையி லிருந்தும் பிறந்து விடவில்லை. அனைத்து குழந்தை களுமே ஏதும் அறியாதவர்களாக (தூய்மை யானவர்களாக) பிறக்கின்றனர். விலங்குகள் தத்தமது உடல் வடிவங்களையும் குணாம்சங் ளையும் கொண்டு பிறக்கின்றன. ஆனால் மனிதர்கள் பிறக்கும் போது மனித உடலையும், கூடவே வெற்றுக் காகிதத்தைப் போன்ற மனதுடனும் பிறக்கின்றனர். பின்னர், நிலவும் சமுதாயத்திலிருந்து தங்களின் குணாதிசயங்களையும், நற்குணங்களையும், தீய குணங்களையும், நல்ல மற்றும் தீய ஒழுக்கங் களையும் பெறுகின்றனர்.

மக்களின் பிரதான எதிரியான செத்து மடிந்து கொண்டிருக்கும் அழுகிப்போன முதலாளித்துவம் என்ற பிரசவ அறையில் தான் இந்த பாலியல் பலாத்காரம் செய்யும் கயவர்கள் ஜனிக்கின்றனர். இதே முதலாளித்துவம் தான் பெண்ணின் உடலை நுகர்வோர் சந்தையில் ஒரு சரக்காக மாற்றி விட்டிருக்கின்றது. முதலாளித்துவம் நீடிக்கும் வரை எண்ணிலடங்கா பாலியல் பலாத்காரம் செய்யும் கயவர்களை பிறப்பித்துக் கொண்டே இருக்கும், பாலியல் பலாத்காரங்களும் எண்ணிக் கையில் உயர்ந்து கொண்டுதான் இருக்கும். எனவே அனைத்து நெருக்கடிக்கும் பீடித்திருக்கும் பிரச்சினைகளுக்கும், அதே சமயம் பெண்களின் பாதுகாப்பை நிரந்தரமாக உறுதி செய்யவும் பாலியல் வன்முறை போன்ற குற்றங்களை ஒழிக்கவும் அனைத்துத் தீமைகளுக்கும் ஆணிவேரான முதலாளித்துவ சமுதாயத்தை தூக்கியெறிந்து புதிய சோசலிச சமுதாயத்தை நிறுவுவது மிகவும் அவசியமாகும். இல்லாவிட்டால் இன்று நம் கண்களில் உருளும் கண்ணீரும் ஆழ்ந்த துக்கமும் மதிப்பற்றதாக போய்விடும்.

ஆட்சியாளர்களின் கண்ணீர் புகை, ரப்பர் குண்டுகள், தண்ணீர் பீரங்கிகள், குண்டாந்தடி களை பொருட்படுத்தாமல் கடும் குளிரையும் தாங்கிக் கொண்டு டெல்லியில் இத்தனை நாட் களாக தீரமிக்க இவ்வரலாற்று போரை நடத்திக் கொண்டு இருக்கும் ஆயிரக்கணக்கான துணிவு கொண்ட இளம் மக்களுக்கு குறிப்பாக நூற்றுக் கணக்கான இளம் பெண்களுக்கு எங்களின் புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள் கிறோம். இந்தப் போரின் தீப்பிழம்பும் உத்வேகமும் இக்காலத்தின் சரியான புரட்சிக்கர சித்தாந்தத்தால் மேலும் பலம்பெற்று காட்டுத்தீயாக பரவும் என நாங்கள் நம்புகிறோம். இந்தத் தீயில் இருந்து எண்ணற்ற குதிராம் போஸ்கள், பகத்சிங்குகள், ப்ரீத்தி லதாக்கள் பிறப்பார்கள். இக்காலக்கட்டத் தினுடைய மிக உயர்ந்த சித்தாந்தமான, மார்க்சிசம் – லெனினிசம் – தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையால் ஆட்கொள்ளப்பட்டு இவர்கள் நன்கு கட்டமைக்கப்பட்ட முதலாளித்துவ எதிர்ப்பு புரட்சிக்கர இயக்கத்தை வளர்த்து எடுப்பார்கள்.

உங்கள் துயரத்தை பலமாக மாற்றுவீர், வெறுப்பின் கனலை வெல்லற்கரியப் போராட்ட உணர்வாக மாற்றுவீர்!

புரட்சிகர வாழ்த்துக்களுடன்

**பிரவாஸ் கோஷ்**
பொதுச் செயலாளர்
எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)
***01.01.2013***














***டெல்லி மாணவி மீதான பாலியல் பலாத்காரத்தைக் கண்டித்து எஸ்யுசிஐ(சி) மற்றும் அதன் வெகுஜன அமைப்புகளான ஏஐஎம்எஸ்எஸ், ஏஐடிஒய்ஓ, ஏஐடிஎஸ்ஓ பல்வேறு மாநிலங்களில் கண்டன இயக்கங்களை நடத்தியது. (இடமிருந்து வலம்) : கேரளா, சென்னை, பெங்களூர், மதுரை, நெய்வேலி***

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in